வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 19.03.2024 செவ்வாய்க்கிழமை இதழ் : 79 பக்கங்கள் : 12



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# தமிழ் அரசுக் கட்சி வழக்கு: சுமுகத் தீர்வுக்கு இணக்கம்

## அரசியல் குழு கூட்டத்தில் எட்டப்பட்டது

வவுனியா, மார்ச் 19

**இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வழக்கு விவகாரத்தில் சுமுகமான தீர்வை எட்டுவதற்கு சுமந்திரன், சிறீதரன் இணக்கம் எட்டியுள்ளனர். இதன் மூலம், அந்தக் கட்சிக்கு எதிரான வழக்கு விரைவாக நிறைவுக்கு வரும் என்று கருதப்படுகின்றது.**

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழு கூட்டம் நேற்று முன்தினம் வவுனியாவில் உள்ள அந்தக் கட்சியின் பணிமனையில் நடந்தது. இந்தக் கூட்டத்தில் கட்சிக்கு எதிராக திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் நடைபெற்று வரும் வழக்கை விரைவாக நிறைவுக்குக் கொண்டுவருவது தொடர்பில் ஆராயப்பட்டது.

தமிழ் அரசுக் கட்சி தொடர்பான வழக்கு எதிர்வரும் ஏப்ரல் 5ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. வழக்கில் எதிராளியாக பெயர் குறிப்பிடப்பட்டவர்கள் தமது கருத்துகளை ஏற்கனவே நீதிமன்றுக்கு

11

# கோப் குழுவிலிருந்து விலகினார் ஐக்கிய மக்கள் சக்தியின் எரான்!



கொழும்பு, மார்ச் 19

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன, பொது நிறுவனங்கள் தொடர்பான பாராளுமன்றக் குழுவின் (கோப்) உறுப்புரிமையிலிருந்து இராஜினாமா செய்துள்ளார்.

தனது இராஜினாமா கடிதத்தை சபாநாயகரிடம் சமர்ப்பித்ததாக எரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.

"பொதுக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசாங்கத்தின் நிதிப் பங்குகளைக் கொண்ட ஏனைய அரை-அரசு அமைப்புகளில் நிதி ஒழுக்கத்தை கடைப்பிடிப்பதை உறுதி செய்வதற்காக கோப் நிறுவப் பட்டுள்ளது. ஆளும் கட்சி உறுப்பினரை தலைவராக நியமிப்பதன் மூலம், அரசாங்கத்தின் நிர்வாகப் பிரிவைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தை நிறைவேற்ற குழு தவறிவிட்டது, "என்று அவர் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

11

## தமிழ் அரசின் தலைமையை ஏற்கத் தயாராகவே உள்ளேன்!

சுமந்திரன் எம். பி.

யாழ்ப்பாணம், மார்ச் 19

இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைமைப் பதவியை பெறுவதற்கு தான் இன்னமும் தயாராகவே இருக்கிறேன் என்று அந்தக் கட்சியின் தலைவர் பதவிக்கான தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைமை மற்றும் நிர்வாகம் பதவியேற்பு விவகாரம் நீதிமன்றில் விசாரணையில் உள்ளது. இந்த வழக்கில்,

11

## ஆசிய அபிவிருத்தி வங்கியால் இலங்கைக்கு 10 கோடி டொலர்

கொழும்பு, மார்ச் 19

ஆசிய அபிவிருத்தி வங்கி, சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு உதவுவதற்காக இலங்கைக்கு 100 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி வழங்குவதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் சிரேஷ்ட நிதித்துறை நிபுணர் மனோஹரி குணவர்தன அறிக்கையொன்றை வெளியிட்டு இதனை தெரிவித்துள்ளார்.

குறித்த கடன் தொகையில், 50 மில்லியன் அமெரிக்க டொலர், ஏற்றுமதி, சுற்றுலா, தொழில்நுட்பம், விவசாயம் மற்றும் உற்பத்தித் துறைகளில் உள்ள பின்னடைவை சந்தித்துள்ள சிறிய மற்றும்

11

## 16 அம்ச திட்டத்தை இலங்கையில் அமுலாக்க ஐ.எம்.எவ். தீர்மானம்

கொழும்பு, மார்ச் 19

சர்வதேச நாணய நிதியத்தின் இலக்குகளை பூர்த்தி செய்வதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தை புதுப்பிக்க 16 அம்ச செயல்திட்டத்தை செயல்படுத்த சர்வதேச நாணய நிதியம் தீர்மானித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள், ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானி, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க, நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க உள்ளிட்ட மத்திய வங்கிகளின் தலைவர்களும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பொது இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

அத்துடன் வெளிப்படையான அரச

11

## 14 வயது சிறுமிமீது 13 பேர் கூட்டு பாலியல் வன்புணர்வு

கொழும்பு, மார்ச் 19

*14 வயது சிறுமியை 13 பேர் கூட்டு பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*அநுராதபுரம் பிரதேசத்தில் உள்ள சிறை அலங்கரிப்பு நிலையம் ஒன்றிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சிறை அலங்கரிப்பு நிலையத்தின் பின்புறமுள்ள அறையில் வைத்தே சிறுமி வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.*

11

## பல்கலைக்கழகங்களில் இன்று வேலைநிறுத்தம்!

யாழ்ப்பாணம், மார்ச் 19

நாட்டின் அனைத்து பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்கள் இன்றைய தினம் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்திலும் கவனவீர்ப்பு போராட்டத்திலும் ஈடுபடவுள்ளன. யாழ்ப்பாண பல்கலைக்கழகமும் இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அனைத்து பல்கலைக்கழகங்களின் கல்விசாரா பணியாளர்களின் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு மற்றும் அவர்களை பாதிக்கும் பிரச்னைகளுக்கு உரிய கால அவகாசம் வழங்கப்பட்டும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும்

11

## பாராளுமன்றத்தின் மீதான மக்கள் நம்பிக்கை வீழ்ச்சி!

கொழும்பு, மார்ச் 19

பாராளுமன்றம் மற்றும் அரசியல் கட்சிகள் மீதான மக்களின் நம்பிக்கை குறைவடைந்துள்ளதாகவும், பாராளுமன்றத்தின் மீது 22 சதவீதமான மக்களும், அரசியல் கட்சிகள் மீது, 19 சதவீதமான மக்களும் நம்பிக்கை கொண்டிருப்பதாக, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தெரிவித்துள்ளது.

அண்மையில் நடந்த ஆய்வில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

'இலங்கையில், ஜனநாயகம் மற்றும்

11

# வெடுக்குநாறிமலை கைதை எதிர்த்து யாழ். பல்கலை மாணவர் போராட்டம்

## இன்று காலை நடத்துவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச்19

தமிழர் தாயகத்தில் தொல்லியல் என்ற பேரர்வையிலான பண்பாட்டு அழிப்பையும் சிங்கள-பௌத்தமயமாக்கலையும் உடன் நிறுத்துமாறு கோரியும், வெடுக்குநாறி மலை ஆலயத்தில் நெடுங்கேணிப் பொலிஸாரால் திட்டமிட்டுக் கைது செய்யப்பட்டவர்களை உடன் விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியும் இன்று செவ்வாய்க்கிழமை யாழ்.பல்கலைக்கழக முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டமொன்று இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்தக்கவனயீர்ப்புப் போராட்டம்

11

# கைது செய்யப்படுவோர்மீது சித்திரவதை; ஐ.நா. மனித உரிமை சபையிடம் அறிக்கை

கொழும்பு, மார்ச் 19

நாட்டில் பொலிஸ் நிலையங்கள் மற்றும் சிறைச்சாலைகளில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறப்படும் சட்டவிரோத கொலைகள் மற்றும் சித்திரவதைகள் தொடர்பான அறிக்கை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

சிறைக் கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் குழுவினால் இந்த அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் 55 ஆவது அமர்வில் கலந்து கொண்டு இந்த அறிக்கையை கையளித்ததாகக் குழுவின் பணிப்பாளர் சபையின் தலைவர் சுதேஷ் நந்திமால் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின்

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது

ஊருக்குள் புதிதாய் ஒருவன் வந்தான். அவனைப் பிடித்த ஊர் மக்கள் "எங்கே இருந்து வருகிறாய்?", என்று கேட்டார்கள்.

நான் "தேவலோகத்திலிருந்து வருகிறேன். நான் கடவுளின் தூதுவன்" என்றான். கேட்டவர்கள் சிரித்தார்கள்.

"உன்னை யார் இங்கே அனுப்பி வைத்தது?" என்று கேட்க, "கடவுள்தான் அனுப்பி வைத்தார்", என்றான். கேட்டவர்களுக்கு மேலும் சிரிப்பு.

புத்தி சரியில்லாதவன் என்பதாகப் புரிந்து கொண்டு அவனைக் கோயிலுக்குக் கூட்டிச் சென்று மனநலம் பாதிக்கப்பட்டவர்களைத் தெளிய வைக்கும் - அங்கே இருந்த கல் மண்டபத் தூணில் இவனைக் கட்டிப் போட்டு விட்டார்கள். இப்போதும் அவன் சிரித்தான்.

"என்னை அனுப்பி வைக்கின்ற போது கடவுளே சொன்னார், இப்படி எல்லாம் நடக்கும் என்று!"

"எப்படி எல்லாம் நடக்கும் என்று?", என்று ஊரார்கள் கேட்க,

"உன்னைக் கட்டிப் போடுவார்கள்... கைகொட்டிச் சிரிப்பார்கள் என்று சொன்னார் கடவுள் - அவர் சொன்னபடியே நடக்கிறது. ஆகவே, நான் அவருடைய தூதன் என்பதற்கு இதைவிட வேறு என்ன வேண்டும்?"

மக்கள் சிந்தனையில் ஆழ்ந்தார்கள்.

"சரி, நீ என்னதான் சொல்ல வருகிறாய்?"

"நம்புங்கள்... நான் ஒரு தீர்க்கதரிசி. கடவுளால் இங்கே அனுப்பப்பட்டவன். உங்களுக்கு வழி காட்டவே இங்கே வந்திருக்கிறேன்." என்றான்.

இப்போது இன்னொரு சிரிப்புச் சத்தம். இவனைவிட பலமாகச் சிரிப்பது கேட்டது. அந்தச் சத்தம் எங்கே இருந்து வருகிறது? என்று பார்த்தான். அவனுக்குப் பின்னால், அதே மண்டபத்தில்! அங்கே இன்னொரு மனிதன் தூணில் கட்டப்பட்டிருக்கிறான்.

"நீ ஏன் சிரிக்கிறாய்?" என்று கேட்டான் இவன்.

"நீ பொய் சொல்கிறாய்... அதனால் சிரிக்கிறேன்!"

"எது பொய் என்கிறாய்?"

"கடவுள் உன்னை அனுப்பி வைத்ததாகச் சொல்வது பொய்!"

"அது எப்படி உனக்குத் தெரியும்?"

"நான் உன்னை அனுப்பி வைக்கவே இல்லையே!"

இவன் அதிர்ச்சியோடு அவனை நிமிர்ந்து பார்த்தான்.

அவன் சொன்னான் பரிதாபமாக... "நான்தான் கடவுள். கடவுள் என்று சொல்லிக் கொண்டு இங்கே வந்தேன். ஒரு மாதமாகக் கட்டிப் போட்டு வைத்திருக்கிறார்கள்."

தந்தை செல்வா தனது கடைசிக் காலத்தில் சொன்னதாக சொல்வார்கள், "கடவுள்தான் இனி தமிழ் இனத்தைக் காப்பாற்ற வேண்டும்" என்று அவர் எந்தக் கட்டத்தில் எதற்காக சொன்னார் என்பதற்கு பலரும் பல்வேறு கதைகளைக் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், இப்போது அவர் இருந்திருந்தால் கடவுளாலும் இனி காப்பாற்ற முடியாது என்று சொல்லியிருப்பாரோ தெரியவில்லை. கடவுள் நம்மைக் காப்பாற்ற வந்தாலும் அவரையும் நம்மவர்கள் கட்டிப் போட்டுவிடுவார்களோ தெரியவில்லை.

அதைவிட தந்தை செல்வா சொன்னது தமிழ் இனத்தைப் பற்றியதா அல்லது தமிழ் அரசு கட்சியைப் பற்றியதா என்பதிலும் இப்போது ஒரு சந்தேகம் எழுவதைத் தவிர்க்கமுடியவில்லை.

தமிழ் அரசு கட்சியின் எழுபத்தி ஐந்து ஆண்டுகால சரித்திரத்தில், கட்சித் தலைவர்கள் எவரும் தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்படவில்லை. அந்தச் சரித்திரத்தையும் கடந்த பொதுச்சபைக் கூட்டத்தில் மாற்றியமைத்தார்கள். அது என்ன சகுனமோ தெரியவில்லை. தெரிவானவர் பதிவியேற்பதை சட்டம் தெரிந்தவர்கள் தடுத்து விட்டனர்.

விவகாரம் நீதிமன்றம்வரை சென்றுவிட்டது. அடுத்த தவணையில் நீதிமன்று அனுமதித்தால் மீண்டும் பொதுசபைக்கு உறுப்பினர்கள் தெரிவிலிருந்து ஆரம்பமாகி - ஒவ்வொரு தொகுதிக் கிளைகளுக்கும் புதியவர்கள் தெரிவாகி- புதிய நிர்வாகிகள் தெரிவு நடக்கவேண்டும். அப்படி தொகுதிக் கிளைகளுக்கு நடக்கும் தெரிவுகளுக்கும் சிலர் நீதிமன்றம் செல்வார்களோ தெரியவில்லை. எல்லாம் சரியாக நடந்து பொதுச்சபைக்கு புதிய உறுப்பினர்கள் தெரிவாகி - புதிய தலைவர், செயலாளர் தெரிவு நடக்கும்போது கட்சியின் பழைய பாரம்பரியத்தின்படி தேர்தல் இல்லாமல் ஒருமித்த முடிவாக தலைவர் தெரிவு இடம்பெறவேண்டும் என்று பலரும் இப்போது கருத்து வெளியிட்டுவரும் வேளையில், கடைசியாக நடந்த தலைவர் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த எம். ஏ. சுமந்திரன், "இலங்கை தமிழரசுக்கட்சி தலைமைப் பதவியைப் பெறுவதற்கு நான் இன்னமும் தயாராகவே இருக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

கடந்த முறை அவரை தலைவர் பதவிக்கு முன்மொழிந்த கட்சியின் சிரேஷ்ட தலைவரும் வட மாகாண அவைத் தலைவருமான சீ. வீ. கே. சிவஞானம் ஐயா, மீண்டும் தலைவர் பதவிக்காக தேர்தல் நடந்தால் தான் அதில் வாக்களிக்கப் போவதில்லை என்று முன்னர் அறிவித்திருந்தமை பற்றி இந்தப் பத்தியில் எழுதியிருந்தது நினைவிருக்கலாம்.

அதாவது, கட்சியின் மரபை மீண்டும் தகர்த்தாவது தான் தலைவராக முயற்சிப்பேன் என்று அறிவித்து தேர்தலுக்கு பிள்ளையார் சுழி போட்டிருக்கிறார். மன்னிக்கவும், சிலுவை போட்டிருக்கிறார்.

இதனை எழுதுகின்றபோதுதான், இன்னுமொரு சம்பவம் ஞாபகத்துக்கு வருகின்றது.

சில வாரங்களுக்கு முன்னர், தமிழ் அரசு கட்சிக்குள் நிலவும் விவகாரம் தொடர்பாக, சிங்கள வார இதழ் ஒன்று எழுதியிருந்த கட்டுரை ஒரு விடயத்தை சுட்டிக் காட்டியிருந்தது.

உதய கம்மன்பிலவின் புதிய ஹெல உறுமய கட்சியும் நீதிமன்றில் வழக்கு ஒன்றை எதிர்கொண்டிருக்கின்றது. அதனைக் காரணம் காட்டி, அந்தக் கட்சியை தேர்தல் திணைக்களம் பிரச்னைக்குரிய கட்சி என்ற பட்டியலில் சேர்த்திருக்கின்றதாம். அதேபோல தமிழ் அரசு கட்சியையும் சிலர் அந்தப் பட்டியலில் சேர்க்க முயற்சிக்கலாம் என்று அந்தப் பத்திரிகை எழுதியிருந்ததுதான் இப்போது ஞாபகத்துக்கு வருகின்றது.

**- ஊர்க்குருவி.**

# ரூ.23 கோடி பெறுமதியான கசிப்புடன் இரண்டு சந்தேக நபர்கள் கைதாகினர்!

கொழும்பு, மார்ச் 19

கசிப்புக் கடத்தல்காரரான சமன் குமார என்ற நபரின் பாரிய கசிப்பு உற்பத்தி நிலையமொன்றில் 23 கோடி ரூபா பெறுமதியான கசிப்புடன் இரு சந்தேக நபர்கள் வளான ஊழல் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வலான ஊழல் தடுப்புப் பிரிவினரால் பாரியளவில் இயங்கி வந்த குறித்த கசிப்பு உற்பத்தி நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைதாகினர் .

சுற்றிவளைப்பின்போது நபர் ஒருவர் பொலிஸாருக்கு தொலைபேசியில் அழைப்பு விடுத்து சோதனைகளை மேற்கொள்ள வேண்டாம் என அச்சிறுத்தியதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், இந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தில் 130 பீப்பாய்கள் கோடாக்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# 21 இந்திய மீனவர்களும் விளக்கமறியலில்!

யாழ்ப்பாணம், மார்ச் 19

எல்லை தாண்டி வந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 21 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.

எல்லை தாண்டி வந்து இலங்கை கடற்பரப்பினுள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த 21 மீனவர்கள் 2 படகுகளுடன் கைது செய்யப்பட்டனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து இலங்கை கடற்படையினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட மீனவர்கள் நீரியல்வள திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பின்னர் நீரியல்வள திணைக்களத்தினர் அவர்களுக்கு எதிராக ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தனர். இந்நிலையில் அவர்கள் அனைவரையும் எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(அ)

# மூதூரில் நேற்று கவனயீர்ப்பு போராட்டம்

திருமலை, மார்ச் 19

வெடுக்குநாறி மலையில் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தியும், மத வழிபாட்டு உரிமையை உறுதி செய்யக் கோரியும் நேற்று திங்கட்கிழமை மூதூரில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மூதூர் மணிக்கூட்டு கோபுரத்துக்கு முன்பாக ஆரம்பித்த கவனயீர்ப்புப் போராட்டம் மூதூர் பிரதேச செயலகம் வரை இடம்பெற்றது.




இப்போராட்டத்தின் இறுதியில் மகஜர் ஒன்றும் மூதூர் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தரிடம் கையளிக்கப்பட்டது.

(அ)

# குஜராத் பல்கலை விடுதியில் தாக்குதல் இலங்கை மாணவன் உட்பட ஐவர் காயம்

கொழும்பு, மார்ச் 19

இந்தியாவின் மேற்கு குஜராத் மாநிலத்திலுள்ள பல்கலைக்கழக விடுதியில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இலங்கை மாணவர் உள்ளிட்ட ஐந்து பேர் கடும் காயமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்தன.

இலங்கை, ஆப்கானிஸ்தான், துருக்மெனிஸ்தான் மற்றும் ஆபிரிக்க நாடுகளை சேர்ந்த மாணவர்களே இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர்.

புனித ரமழான் நோன்பு காலத்தில் தொழுகையில் ஈடுபட்டதன் காரணமாக தீவிர வலதுசாரி குழுவினால் இந்த மாணவர்கள் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக விசாரணை இடம்பெற்று வரும் நிலையில், சம்பவம் தொடர்பில் இருவர் குஜராத் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# உணவு ஒவ்வாமையினால் மூவர் வைத்தியசாலையில்

கொழும்பு, மார்ச் 19

மீகஹகிவுல பகுதியில் உணவு ஒவ்வாமையால் மூன்று பேர் வைத்தியசாலையில் அனுமதிகப்பட்டுள்ளனர்.

உலர்ந்த சோறு, தேங்காய், சீனி ஆகியவற்றில் தயாரிக்கப்பட்ட உணவை உட்கொண்ட நிலையில், பாதிக்கப்பட்ட அவர்கள் மீகஹகிவுல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியைச் சேர்ந்த 14 , 34 , 28 வயதுடைய மூவரே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த உணவை தேநீருடன் அருந்தியதன் காரணமாக அதிக வாந்தி ஏற்பட்டதால் மீகஹகிவுல வைத்தியசாலையில் அனுமதிக்கப பட் டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(அ)

# சுவாச நோய்கள் அதிகரிக்க வாய்ப்பு

கொழும்பு, மார்ச் 19

கடும் வெப்பமான காலநிலை காரணமாகச் சுவாச நோயாளிகள் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகச் சுகாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போதைய சூழ்நிலையில் தொற்று நோய்கள் பரவும் அபாயம் காணப்படுவதாக கண்டி தேசிய வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவர் தெரிவித்தார்.

வெப்பமான காலநிலையில் பரவும் நோய்களைத் தடுக்க முககவசங்களை அணிய வேண்டும் என பொது மக்களுக்கு வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (அ)

ஈழநாடு
Eelanadu
19.03.2024 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், பங்குனி 06

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# 14 வருடகால எதிர்ப்புகளின் பயன்

யுத்தம் முடிவுற்று பதினான்கு வருடங்களாகி விட்டன. இந்தப் பதினான்கு வருடங்களில் தமிழர் பக்கத்தில் ஜனநாயக ரீதியில் பலவாறான எதிர்ப்புகள் காண்பிக்கப்பட்டிருக்கின்றன. 'எழுக தமிழ்' தொடங்கி 'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை'யில் மக்களைத் திரட்டி எதிர்ப்பு காண்பிக்கப்பட்டிருக்கின்றது - மக்கள் தன்னெழுச்சியாக திரண்டிருக்கின்றனர். ஒப்பீட்டடிப்படையில் 'பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரை' என்னும் சுலோகத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட பேரணியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டனர். அது தொடர்பில் அதிகம் விவாதிக்கப்பட்டது - கருத்துருவாக்கங்கள் செய்யப்பட்டன. ஆனால், இறுதியில், அதனால் எதிர்பார்த்த விளைவுகளைப் பெற முடிந்தனவா? அரசின் ஒரு நகர்வைத் தானேனும் தடுத்து நிறுத்த முடிந்ததா? அரசாங்கத்துக்கு ஒரு முன்னெச்சரிக்கையையாவது கொடுக்கமுடிந்ததா?

கடையடைப்பு, பருவகால அடையாள எதிர்ப்புகள் எனப் பல எதிர்ப்பு நடவடிக்கைகள் - பல தரப்பினராலும் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், எந்தவொரு விடயத்தையும் தடுத்து நிறுத்த முடியவில்லை. சர்வதேசத்திடம் செய்யப்பட்ட முறைப்பாடுகளாலும் எதுவும் நிகழவில்லை. இத்தனைக்குப் பின்னரும் அரசு அதன் நிகழ்ச்சி நிரலை தொய்வின்றி முன்னெடுக்கின்றது என்றால் அதன் பொருள் என்ன? - அரசு தமிழரின் எதிர்ப்பு நடவடிக்கைகளை ஒரு பொருட்டாகக்கூட மதிக்கவில்லை என்பதுதானே பொருள் அல்லது விடயங்களைக் கையாள தமிழர் தரப்புக்குத் தெரியவில்லையா?

இப்போது எதிர்ப்பு அரசியல் வெடுக்குநாறிமலை சிவனில் தரித்து நிற்கின்றது. ஆனால், வெடுக்குநாறிமலை விவகாரத்திலும் தமிழருக்கு வெற்றி கிட்டப்போவதில்லை. குருந்தூர்மலை விவகாரத்தைக் கைவிட்டது போன்று - தையிட்டி விகாரை விடயத்தை கைவிட்டது போன்று - வெடுக்குநாறிமலை சிவன் ஆலய விடயமும் சில வாரங்களில் மறந்துபோகும். ஏனெனில், அதனை மறக்கடிக்கும் வகையில் பிறிதோர் இடத்தில் புதிய பிரச்னை ஒன்று ஏற்படுத்தப்படும். தேர்தல் நெருங்கும்போது வெடுக்குநாறிமலை விடயம்போல இன்னும் பல விடயங்கள் நடைபெற்றால் அதில், ஆச்சரியப்பட ஒன்றுமிருக்காது. 'ஈழநாடு' இதனை முன்கூட்டியே கூறிவைக்கின்றது.

தமிழ் மக்கள் இலங்கைத் தீவின் இறைமையுள்ள ஒரு மக்கள் கூட்டம். இதனை நிரூபிக்கும் நோக்கில் விடயங்கள் கையாளப்பட்டாலே அன்றி, தமிழ் மக்களை எவரும் திரும்பிப் பார்க்கப்போவதில்லை. கடந்த பதினான்கு வருடங்களாகத் தமிழ் மக்களை எவருமே திரும்பிப் பார்க்கவில்லை - காரணம் தமிழ் மக்களின் தலைமைகள் என்போர் முறைப்பாடுகளை செய்து கொண்டிருந்தனர் - பாதிக்கப்பட்ட மக்களோ ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தனர். ஒப்பாரி ஒரு புறமும் - ஒப்பாரிக்கு நீதி வேண்டும் என்னும் முறைப்பாடு இன்னொரு புறமுமாக தமிழர்களின் அரசியல் முன்னெடுக்கப்பட்டது. ஆனால், தமிழ் மக்கள் தேவையானவர்கள் - அவர்களின் நலன்களை பாதுகாப்பது அவசியம் என்னும் நிலையில் எந்தவொரு வெளித்தரப்பும் சிந்திக்கவில்லை - ஏன் சிந்திக்கவில்லை? ஏனெனில், அவ்வாறு சிந்திக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தக்கூடிய மக்கள் கூட்டம் என்பது நிருபிக்கப்படவில்லை. அதனை நோக்கித் தமிழ் தலைமைகள் என்போரால் செயலாற்ற முடியவில்லை. ஒரு குண்டூசியைத்தானும் தூக்கிப் போட முடியவில்லை. இதனை கருத்தில் கொண்டு சிந்தித்தால் இந்த ஜனாதிபதித் தேர்தலை எவ்வாறு கையாள வேண்டும் என்னும் கேள்விக்கான பதில் மிகவும் இலகுவானது.

# காலாவதியாகிய பொருட்களை வைத்திருந்தோர் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ்ப்பாணம் - திருநெல்வேலி பகுதியில் உள்ள பல்பொருள் அங்காடிகளில் பொதுச் சுகாதார பரிசோதகர் பா.சஞ்சீவன் தலைமையில் திடீர்ச் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது திகதி காலாவதியான பொருட்கள், பழுதடைந்த பொருட்கள் மற்றும் உரிய சுட்டுத்துண்டு இடப்படாத பொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

குறித்த பல்பொருள் அங்காடிகளின் உரிமையாளர்களுக்கு எதிராக யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு அவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இதன்போது ஒருவர் வருகை தராத நிலையில், மற்றையவருக்கு எதிராக 18 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. அவருக்கு தண்டப்பணமாக ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் அறவிடப்பட்டதுடன் கடுமையான எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. (அ)

# மின்சார வாகன இறக்குமதியால் வருமானம் உயர்வு

கொழும்பு, மார்ச் 19

நாட்டுக்கு மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியதன் காரணமாக மோட்டார் வாகனங்கள் மீதான வரி வருமானம் அதிகரித்துள்ளது.

கடந்த வருடத்தின் முதல் ஒன்பது மாதங்களில் 57.1 சதவீதம் அதிகரித்து 21.5 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளதாக பொது நிதி முகாமைத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மோட்டார் வாகனங்கள் மீதான வரி வருவாயாக 2022 முதல் ஒன்பது மாதங்களில் 13.7 பில்லியன் ரூபாய் ஈட்டப்பட்டுள்ளது. அதன்படி, 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களுடன் ஒப்பிடுகையில், 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் மோட்டார் வாகனங்கள் மீதான வரி வருமானம் 21.5 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் மின்சார வாகனங்களை இறக்குமதி செய்ய அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வவுனியாவில் யானை தாக்கி முதியவர் பலி!

வவுனியா, மார்ச் 19

வவுனியா - செட்டிகுளம் பகுதியில் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த முதியவர் நேற்று முன் தினம் மாலை வீதியில் சென்றுகொண்டிருந்தபோது அப்பகுதிக்கு வந்த யானை அவரை தாக்கியுள்ளது.

இதன்போது படுகாயமடைந்த முதியவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் செட்டிகுளம் - மருதமடு பகுதியைச் சேர்ந்த 63 வயதுடைய முதியவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# போதைப்பொருளுடன் ஒருவர் கைது!

கொழும்பு, மார்ச் 19

ஹங்வெல்ல - பாலகேவத்த பகுதியில் சுமார் ஒரு கிலோகிராமுக்கும் அதிக நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவர் கைதாகியுள்ளார்.

வலான மோசடி தடுப்புப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட சோதனையின் போது குறித்த சந்தேகநபர் கைதாகியுள்ளார்.

கைதானவர் பிரெண்டிகம்பல பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய ஒருவரென தெரியவந்துள்ளது.

சந்தேகநபரிடமிருந்து போதைப்பொருள் வர்த்தகத்துக்காக பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் 3 கையடக்க தொலைபேசிகளும் மீட்கப்பட்டுள்ளன.

# புதையல் தோண்டிய 06 பேர் கைது!

கொழும்பு, மார்ச் 19

ரதெல்ல பகுதியிலுள்ள காப்புக்காட்டில் புதையல் தோண்டிய 06 பேரை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.


விசேட அதிரடிப்படையின் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பிரகாரம், குறித்த பகுதியில் நேற்று முன் தினம் அதிகாரிகள் குழுவொன்று சோதனையை மேற்கொண்டது.

இதன்போது சட்டவிரோதமான முறையில் புதையல் தோண்டிக் கொண்டிருந்த 06 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பொத்துவில், நிட்டம்புவ, பிபில, குருணாகல் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

அத்துடன், சந்தேகநபர்களிடம் இருந்து பல்வேறு பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அவை விசாரணைக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



மார்ச் - 19 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம் - பங்குனி 06
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : தசமி




**மேடம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**இடபம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு கிடைக்கும். தைரியம் கூடும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். பழைய சிக்கலில் ஒன்று தீரும். மரியாதைக் கூடும். தடைகள் உடைபடும் நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம். இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கன்னி**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் நிர்வாகத் திறமை வெளிப்படும். இனிமையான நாள்.

**துலாம்**
தவறு செய்பவர்களை தட்டிக்கேட்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார். வியாபாரத்தில் பற்று வரவு அதிகரிக்கும். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். வியாபாரத்தில் வளைந்து கொடுத்துப் போவது நல்லது. நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும்.

**மகரம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். சகோதரர் வகையில் ஒற்றுமை பிறக்கும். தாய் வழியில் ஆதரவுப் பெருகும். சக ஊழியர்கள் உதவுவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கும்பம்**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கையை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற் கொள்வீர்கள். குடும்பத்தில் சின்ன சின்ன பிரச்னைகள் அதிகமாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் இருந்த பிரச்னைகள் விலகும்.

# அ. தி. மு. க. கூட்டணியில் பா. ம. க., தே. மு. தி. க.!

## கூட்டணி ஒப்பந்தம் நாளை கைச்சாத்தாகும்

சென்னை, மார்ச் 19

அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் (அ. தி. மு. க.) தலைமையிலான கூட்டணியில் பாட்டாளி மக்கள் கட்சியும் (பா. ம. க.) தேசிய முற்போக்கு திராவிட கழகமும் (தே. மு. தி. க.) இணைவது உறுதியாகியுள்ளது. மூன்று கட்சிகளின் தலைவர்களும் நாளை கூட்டணி உடன்பாட்டில் கையொப்பமிடுவர் என்று தெரிய வருகின்றது.

ஏப்ரல் 19ஆம் திகதி தமிழ் நாட்டில் ஒரே கட்டமாக மக்களவைத் தேர்தல் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. பெரும்பாலான கட்சிகள் தங்கள் கூட்டணியை உறுதி செய்துள்ள நிலையில், பா. ம. க., தே. மு. தி. க. உள்ளிட்ட சில கட்சிகள் தொடர்ந்து கூட்டணி பேச்சில் ஈடுபட்டு வருகின்றது.

பா. ஜ. க - அ. தி. மு. க. கூட்டணி முறிந்து இரு கட்சிகளும் தனித்தனியே கூட்டணி அமைத்து வருகின்றன. பா. ம. க, தே. மு. தி. க கட்சிகளை தங்கள் கூட்டணியில் இழுக்க இரு கட்சிகளும் தீவிர பேச்சில் கடந்த ஒரு மாதமாக ஈடுபட்டன.

இதனிடையே, அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியுடன் நேற்று முன்தினம் இரவு பா. ம. க. சட்டமன்ற உறுப்பினர் நடத்திய பேச்சில் தொகுதி உடன்பாடு எட்டப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, பா. ம. க. நிறுவனர் ராமதாஸ் மற்றும் அக்கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸை அ. தி. மு. க. நிர்வாகிகள் நேரில் சந்திக்கவுள்ளனர்.

இதேபோல், தே. மு. தி. கவுடனும் தொகுதி பங்கீட்டை அ. தி. மு. க. இறுதி செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அ. தி. மு. க. கூட்டணியில் பா. ம. கவுக்கு 7 மக்களவை தொகுதிகள் மற்றும் ஒரு மாநிலங்களவை ஒதுக்கப்பட்டுள்ளன. தே. மு. தி. கவுக்கு 4 மக்களவை தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிகிறது.

நாளை புதன்கிழமை மூன்று கட்சிகளின் தலைவர்களும் கூட்டணி உடன்படிக்கையில் கைச்சாத்திடுவர் என்றும் தெரிய வருகின்றது. (ஐ)

## பொன்முடிக்கு பதவி பிரமாணம் செய்துவைக்க ஆளுநர் ரவி மறுப்பு

சென்னை, மார்ச் 19

பொன்முடியை மீண்டும் அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்துவைக்க ஆளுநர் ரவி மறுத்துவிட்டார்.

முன்னாள் அமைச்சர் பொன்முடிக்கு விதிக்கப்பட்ட தண்டனையை உச்சநீதிமன்றம் நிறுத்தி வைத்தது. நீதிமன்ற தீர்ப்பின் நகல் வந்தவுடன் திருக்கோவிலூர் தொகுதி வெறுமையான தாக வெளியிட்ட அறிவிப்பு திரும்பப் பெறப்பட்டது.

இதையடுத்து, அமைச்சரவையில் மீண்டும் பொன்முடியை சேர்க்க பரிந்துரைத்து ஆளுநருக்கு முதல்வர் மு. க. ஸ்டாலின் கடிதம் எழுதியிருந்தார்.

இந்நிலையில், தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர் பொன்முடிக்கு பதவிப்பிரமாணம் செய்து வைக்க ஆளுநர் ஆர். என். ரவி மறுப்பு தெரிவித்துள்ளார்.

பொன்முடிமீதான வழக்கு நிலுவையில் உள்ளதால் பதவிப் பிரமாணம் செய்து வைக்க மறுப்பு தெரிவித்து முதலமைச்சர் ஸ்டாலினுக்கு ஆளுநர் ரவி கடிதம் மூலம் அறிவித்துள்ளார். (ஐ)

## ஆளுநர் பதவியை துறந்தார் தமிழிசை



சென்னை, மார்ச் 19

தெலுங்கானா ஆளுநர் மற்றும் புதுச்சேரி துணைநிலை ஆளுநர் பதவிகளிலிருந்து தமிழிசை சவுந்தரராஜன் விலகினார்.

தமிழிசை கடந்த 2019 மக்களவை தேர்தலில் தூத்துக்குடி தொகுதியில் தி. மு. கவின் கனிமொழியை எதிர்த்து போட்டியிட்டு தோல்வியடைந்தார். 2019இல் தெலுங்கானா ஆளுநராகவும், 2021இல் புதுச்சேரி துணை நிலை ஆளுநராகவும் தமிழிசை கூடுதலாக நியமிக்கப்பட்டார்.

இரு மாநிலங்களில் ஆளுநராக பணியாற்றி வந்த நிலையில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக அவர் தனது பதவிகளை துறந்துள்ளார்.

தனது பதவி விலகல் கடிதத்தை நேற்று தமிழிசை ஜனாதிபதி திரௌபதி முர்முவுக்கு அவர் அனுப்பி வைத்துள்ளார். தூத்துக்குடி, நெல்லை அல்லது புதுச்சேரியில் தமிழிசை போட்டியிடலாம் என்று கூறப்படுகின்றது. (ஐ)

## மாற்று சின்னத்தை அறிவிக்க தயாராகிறது நாம் தமிழர் கட்சி!

சென்னை, மார்ச் 19

கரும்பு விவசாயி சின்னத்தை தமக்கே ஒதுக்க வேண்டும் என்று கோரி நாம் தமிழர் கட்சி வழக்கு தொடுத்துள்ளது. இந்த நிலையில், கரும்பு விவசாயி சின்னம் கிடைக்காவிடின் மாற்று சின்னத்தை விரைவாக அறிவிக்க நாம் தமிழர் கட்சி தயாராகி வருகிறது.

இதையொட்டி நாம் தமிழர் கட்சியின் சின்னம் என்ன என்று வாசகங்கள் அடங்கிய பிரசுரங்களை கட்சியினர் சமூக வலைதளங்களில் பரப்பி வருகின்றனர்.

சீமான் ஏற்கெனவே கட்சிக்கான மாற்றுச் சின்னத்தை தேர்ந்தெடுத்து விட்டார் என்றும் இந்த வாரம் சென்னையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் அதை வெளியிடுவார் எனவும் கூறப்படுகின்றது. (ஐ)

# தமிழ்நாட்டை போதைப்பொருள் கேந்திரமாக தி. மு. க. மாற்றியுள்ளது!

சென்னை, மார்ச் 19

தமிழகத்தை போதைப் பொருள் கேந்திரமாக தி. மு. க. அரசாங்கம் மாற்றியுள்ளதாக அ. தி. மு. க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில்,

இந்தியாவிலேயே போதைப் பொருள் கடத்தலில் முதன்மை மாநிலமாக தமிழகத்தை உருவாக்கிய தி. மு. க. அரசுக்கு கண்டனம். போதைப் பொருள் கடத்தல் சம்பவங்களில் குஜராத் தோடும், அஸாமோடும், மற்ற வட மாநிலங்களோடும் தமிழகத்தை ஒப்பிட்டுத் தனக்குத் தானே ஒரு பொய்மைத் தோற்றத்தை உருவாக்கி வருகிறார் முதல்வர் ஸ்டாலின்.

போதைப் பொருள் தொடர்பாக 29 நாட்களில் 402 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது. இந்த 402 பேர் சுதந்திரமாக போதைப் பொருள் வியாபாரம் செய்ய அனுமதி அளித்தது யார்? இந்த வியாபாரத்தின் ஆணிவேரை கைது செய்ய இதுவரை இந்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

போதைப் பொருள் கடத்தல் குறித்து நாங்கள் எழுப்பிய பல கேள்விகளுக்கு பதிலளிக்காத இந்த தி. மு. க. அரசு இனியாவது தூக்கத்தில் இருந்து விழித்து தமிழகத்தில் நிலைமை என்ன என்று கூர்ந்து கவனித்து உடனடி நடவடிக்கை எடுக்க வலியுறுத்துகிறேன் - என்றுள்ளது. (ஐ)

ஈழநாடு



# ரஷ்ய ஜனாதிபதி புடினைப்போல் எனக்கும் அதிர்ஷ்டம் வருகின்றது!

## கூறுகின்றார் குமார வெல்கம

கொழும்பு, மார்ச் 19

ரஷ்ய ஜனாதிபதி புடினைப்போல் எனக்கும் அதிஷ்டம் வருகின்றது. எனது ஜாதக நிலையும் நல்லதாகவே உள்ளது. ஆக அடுத்த ஜனாதிபதி தேர்தலில் களமிறங்க தயாராகவே இருக்கின்றேன் - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கு வாக்களிக்க வேண்டாம் என கூறினேன், ஆனால் மக்கள் வாக்களித்தனர். இறுதியில் என்ன நடந்தது? நான் கூறியதுபோல நாட்டுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டது. எனவே, எமது கருத்துக்களையும் மக்கள் செவிமடுக்க வேண்டும்.

எனக்கு கட்சி இருக்கின்றது, சிறந்த தலைவராக நான் உள்ளேன். அதுமட்டும் அல்ல ஜாதக நிலையும் நல்லதாகவே உள்ளது. புடினுக்குபோல எனக்கும் அதிஷ்டம் தென்படுகின்றது. ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதற்கான அனைத்து தகுதியும் எனக்கு இருக்கின்றது. எனக்கு இல்லாத தகைமை என்ன?-என்றார். (அ)



# கொழும்பை வந்தடைந்தது எம்பியன்ஸ் சொகுசு கப்பல்!

கொழும்பு, மார்ச் 19

எம்பியன்ஸ் என்ற சொகுசு ரக கப்பல் நேற்று காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

1,131 பயணிகள் மற்றும் 565 பணியாளர்களுடன் தாய்லாந்தின் புக்கெட்டில் இருந்து குறித்த கப்பல் நாட்டுக்கு வருகை தந்துள்ளது.

அவுஸ்திரேலியா, கனடா, பிரித்தானியா மற்றும் ஜேர்மன் நாட்டு பயணிகள் அந்த கப்பலில் வருகை தந்துள்ளனர்.

குறித்த கப்பலில் வருகை தந்த பயணிகள் கொழும்பு, கண்டி மற்றும் காலி ஆகிய நகரங்களுக்குச் செல்லவுள்ளனர்.

இந்த கப்பல் மாலைதீவு நோக்கி புறப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# தொடரும் சுங்க திணைக்கள அதிகாரிகளின் போராட்டம்!

கொழும்பு, மார்ச் 19

சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் கடந்த வெள்ளிக்கிழமை முதல் முன்னெடுக்கப்பட்டு வரும் தொழிற்சங்க நடவடிக்கை நேற்றும் தொடர்ந்தது.

இதன் காரணமாக, சோதனை மையங்களில் ஏராளமான கொள்கலன்கள் தேக்கமடைந்துள்ளதாக கொள்கலன் ஊர்தி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த தொழிற்சங்க நடவடிக்கையின் காரணமாக பண்டிகை காலத்தின்போது மக்களுக்கு வழங்கவேண்டிய அதிகளவிலான பொருட்களை வெளியிடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் சனத் மஞ்சுள குறிப்பிட்டார்.

இந்த நிலைமை தொடருமாயின் எதிர்வரும் காலங்களில் பாரிய நெருக்கடி ஏற்படக்கூடும் என அவர் தெரிவித்தார். (அ)

# உக்ரைனுக்காக போரிட இலங்கையில் ஆட்சேர்த்த தம்பதிக்கு விளக்கமறியல்

கொழும்பு, மார்ச் 19

உக்ரைன் இராணுவத்தில் வேலை வாய்ப்பை பெற்று தருவதாக கூறி மனித கடத்தலில் ஈடுபட்ட இலங்கையை சேர்ந்த தம்பதியரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் ஆட்கடத்தல் விசாரணை மற்றும் கடல்சார் குற்றப் விசாரணை பிரிவில் சரணடைந்ததை அடுத்து அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகத்திற்குரிய தம்பதியினர் கடவத்தை பிரதேசத்தில் வசித்து வருவதுடன், கணவர் தொழில் ரீதியாக பொருளியல் ஆசிரியர் ஆவார்.

உக்ரைன் ராணுவத்தில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி அவர்கள், இந்த நாட்டை விட்டு அனுப்பியவர்களின் எண்ணிக்கை 55 ஆகும்.

இவர்களில் இராணுவத்தில் பணியாற்றிய ஒரு குழுவும் உள்ளடங்கியதுடன், சந்தேக நபர்கள் உக்ரைன் இராணுவத்தில் கப்டனாக கடமையாற்றி தற்போது உயிரிழந்துள்ள ரனிஷ் ஹெவெகேவின் ஒருங்கிணைப்புடன் குறித்த தரப்பினரை உக்ரைனுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இலங்கையில் இருந்து வெளியேறும் நபர்கள் இந்தியா வழியாக போலந்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு பின்னர் உக்ரைனுக்குள் நுழைந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இவ்வாறு அனுப்பப்பட்டவர்களில் ஒருவரிடம் இருந்து சந்தேக நபர்கள் 02 முதல் 05 லட்சம் ரூபாய் வரை வசூலித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

நாட்டை விட்டு வெளியேறியவர்களில் சிலர் உக்ரைனுக்கு சென்றுள்ளபோதும் மேலும் சிலர் போலந்துக்குள் செல்ல முடியாமல் நாடு திரும்பியும் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மற்றுமொரு குழு அஜர்பைஜானுக்கு சென்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் அதன் பின்னர் அவர்கள் தொடர்பில் எவ்வித தகவலும் கிடைக்கவில்லை என விசாரணை அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

உக்ரைன் இராணுவத்தில் பணியாற்றச் சென்றவர்களில் மூவர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குற்றப் புலனாய்வுப் திணைக்களத்தின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரொஹான் பிரேமரத்னவின் பணிப்புரைக்கமைய, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சமரக்கோன் பண்டாவின் தலைமையில், ஆட்கடத்தல் விசாரணை மற்றும் கடல்சார் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# களுகங்கையில் குதித்தவர் பலி!

கொழும்பு, மார்ச் 19

இரத்தினபுரி- களுகங்கையில் மூழ்கி காணாமற்போன நபர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சமகிபுர பகுதியை சேர்ந்த 34 வயதான ஒருவரே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்தினபுரி - பௌத்த விகாரைக்கு அருகாமையிலுள்ள களுகங்கையில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டவர்களை சுற்றிவளைப்பதற்காக பொலிஸார் குறித்த பகுதிக்குச் சென்றுள்ளனர்.

இதன்போது, அகழ்வில் ஈடுபட்டிருந்த மூவரும் களுகங்கையில் குதித்துள்ளனர்.

அவர்களில் இருவர் மீட்கப்பட்டதுடன், ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 19 வயதுடைய இளைஞன் உயிரிழப்பு!

கொழும்பு, மார்ச் 19

ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 19 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த 6 ஆம் திகதி கடுவலை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட அவர், மறுநாள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத் தப்பட்டதையடுத்து 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்த விடயம் தொடர்பில் சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் சிறைச்சாலை ஆணையாளர் காமினி பி. திஸாநாயக்கவை தொடர்பு கொண்டு வினவிய போது, அதற்கு பதிலளித்த அவர் சிறைச்சாலையில் சுகவீனமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் அவர் உயிரிழந்துள்ளதாக தெரிவித்தார்.

எனினும் மரணத்திற்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை.

அதேநேரம், துப்பாக்கிச் சூட்டு சம்பவமொன்றுக்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவரும் புத்தளம் சிறைச்சாலையில் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

உயிரிழந்தவர் கருவலகஸ்வெவ பகுதியைச் சேர்ந்த 50 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

குறித்த நபர் சில மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த ஒருவரென பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# யுக்திய: 1,073 பேர் கைது!

கொழும்பு, மார்ச் 19

யுக்திய சோதனை நடவடிக்கையின் கீழ் நாடளாவிய ரீதியில் 1,073 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை 12.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியால நடவடிக்கையின் போதே இவர்கள் கைதாகியுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் 1,019 பேர் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் எனவும் குற்றப் பிரிவினருக்கு அனுப்பப்பட்டுள்ள பட்டியலில் உள்ள 54 சந்தேக நபர்களும் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சோதனையின்போது, ஹெரோயின், ஐஸ், கஞ்சா, மாவா உள்ளிட்ட கணிசமான அளவு போதைப் பொருட்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 49 பேர் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகம் மற்றும் பொலிஸ் விசேட பணியகம் ஆகியவற்றின் கண்காணிப்புப் பட்டியலில் இருந்தவர்கள் எனவும் பொது மக்கள் பாது காப்பு அமைச்சு தெரிவித்துள் ளது. (அ)

# பஸ் சாரதிகளுக்கு போதைப்பொருள் விநியோகம் செய்யும் கும்பல் கைது!

கொழும்பு, மார்ச் 19

கொழும்பு கோட்டை பகுதியில் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு போதைப்பொருள் விநியோகம் செய்யும் மோசடி கும்பலை கொழும்பு டாம் வீதி பொலிஸ் நிலையப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கோட்டைப் பகுதியில் இருந்து சேவையில் ஈடுபடும் பஸ்களின் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் கடமையின்போது தினமும் போதைப்பொருளை உட்கொள்வதாக பொலிஸார் தெரிவித்தனர்.

போதைப்பொருளை விநியோகித்ததாக சந்தேகிக்கப்படும் நபரையும், அவரிடமிருந்து போதைப்பொருட்களை வாங்கிய பல பஸ் ஊழியர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# சுதந்திரக் கட்சி கூட்டணியின் தலைமைத்துவத்தில் நெருக்கடி

## சந்திரிகா பின்னடிப்பதால் இந்த நிலை

கொழும்பு, மார்ச் 19

**சுதந்திரக் கட்சியை அடிப்படையாகக் கொண்டு ஸ்தாபிக்கப்படவுள்ள புதிய கூட்டணியின் தலைமைத்துவம் தொடர்பில் நெருக்கடி நிலைமை தோன்றியுள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.**

புதிய கூட்டணியின் தலைமைத்துவத்தைப் பெற விருப்பம் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டுள்ளார்.

கடந்த சில நாட்களாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் புதிய கூட்டணி தொடர்பில் பல கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

சுதந்திரக் கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டமும் அண்மையில் கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்றதுடன் இந்த நெருக்கடி நிலை குறித்தும் கலந்துரையாடப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

எவ்வாறாயினும், புதிய கூட்டணியின் எதிர்கால நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய முன்னேற்றம் தொடர்பில் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, அந்தக் கலந்துரையாடலில் மீண்டும் ஒரு முறை முன்னாள் ஜனாதிபதியுடன் இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாட தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (அ)

# இரத்தினபுரியில் அதிகூடிய வெப்பம்

கொழும்பு, மார்ச் 19

நேற்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் இரத்தினபுரி மாவட்டத்தில் அதிகூடிய வெப்பநிலை பதிவாகியுள்ளது.

இதன்படி இரத்தினபுரி மாவட்டத்தில் 36.3 பாகை செல்சியஸாகவும் அனுராதபுரத்தில் 35.5 பாகை செல்சியஸாகவும் வெப்பநிலை பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் கடந்த 24 மணித்தியாலங்களில் கொழும்பில் 33.03 பாகை செல்சியஸாக வெப்பநிலை பதிவாகியுள்ளது. (அ)

# கட்சி மாறவுள்ள எம்.பிக்கள்?

கொழும்பு, மார்ச் 19

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை வெற்றி பெறச் செய்வது தொடர்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆலோசித்து வருவதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

இன்று சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்போது சில எம்.பிக்கள் கட்சி மாறலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் இன்று நடைபெறவுள்ளது.

பின்னர் மறுநாள் மாலை 4.30 மணிக்கு பிரேரணை மீதான வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. (அ)

# கட்சியின் முடிவே இறுதித் தீர்மானம்

## நாமல் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 19

எந்தவொரு கட்சிக்குள்ளும் தேர்தலை விரும்புபவர்களும் விரும்பாதவர்களும் உள்ளனர், ஆனால் கட்சியின் முடிவே, இறுதித் தீர்மானம் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் காலத்தில் குறித்த நேரத்தில் தேர்தல் இடம்பெற்றது. பொதுத்தேர்தல் ஒன்று நடைபெற்றால் உண்மையான மக்கள் கருத்தை பார்த்துக்கொள்ளலாம்.



கட்சிக்குள் தனிப்பட்ட கருத்துகள் இருக்கலாம், தேர்தல் வேண்டாம் என்று சொல்லலாம், ஆனால் அவை தனிப்பட்ட கருத்துக்கள் மட்டுமே. தேர்தலில் என்ன நடத்த வேண்டும் என்பதை கட்சி முடிவு செய்தால், அனைவரும் ஆதரிக்க வேண்டும்-என்றார். (அ)

# மாற்றங்கள் நிகழ்வதை சிறிய குழு தடுக்கின்றது

## ஹரிணி அமரசூரிய குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 19

அதிகார மாற்றம் இலகுவானதாகயிருக்கப் போவதில்லை என தெரிவித்துள்ள தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய, மாற்றங்கள் நிகழ்வதை உயர்குழாமை சேர்ந்த சிறிய குழுவினர் தடுத்து வருகின்றனர் எனவும் கூறினார்.

லண்டன் பெண்கள் மாநாட்டில் உரையாற்றுகையில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் கடந்த 76 வருடங்களாக இடம்பெற்ற விடயங்களுக்கு உயர்குழாமை சேர்ந்த சிறிய குழுவினரே காரணம்.

இந்த சிறிய குழுவினர் இலகுவில் அதிகாரங்களைக் கைவிடமாட்டார்கள். தங்களை விட அந்த குழுவினரை விட தாங்கள் பலம் வாய்ந்தவர்களாக காணப்படுகின்றனர் என்பதை மக்கள் தற்போது உணர்ந்துள்ளனர்.

மாற்றங்கள் இலகுவாக நிகழப்போவதில்லை அதிகாரத்தில் உள்ள சிறிய குழுவினர் மாற்றங்கள் நிகழ்வதை தடுப்பதற்காக அனைத்தையும் செய்வார்கள்.

ஆனால் நாட்டு மக்கள் அவர்களை விட வலுவானவர்கள். இதற்கு முன்னர் நாங்கள் எங்கள் பலத்தை உணரவில்லை,ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட குழுவாக மாறுவதன் கூ மூலம் நாங்கள் அவர்களை விட வலுவானவர்களாக திகழுவோம்.

அவர்கள் கடந்த 76 வருடங்களாக இந்த நாட்டை அழித்துவிட்டார்கள் இந்த யுகத்தை முடித்துவைப்பது எங்களுக்கு உள்ள கடமை உங்களால் அந்த மாற்றத்தை செய்ய முடியும் நீங்கள் அந்த மாற்றத்தின் ஒரு பகுதியாகவேண்டும்-என்றார்.

# புற்றுநோய் சிகிச்சை பிரிவின் சேவைகள் முற்றாக ஸ்தம்பிதம்!

## சிக்கலில் அரச வைத்தியசாலைகள்

மட்டக்களப்பு, மார்ச் 19

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவில் நோயாளர்களுக்கு வழங்கப்படும் மேலதிக சேவைகள் நேற்று முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அரச கதிரியல் தொழிநுட்பவியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவில் கடமை புரியும் கதிர்வீச்சு சிகிச்சையாளர்களுக்கு வழங்கவேண்டிய மேலதிக சேவைக்காலக் கொடுப்பனவை வைத்தியசாலை நிர்வாகம் வழங்குவதில்லை எனத் தெரிவித்தே இவ்வாறு மேலதிக சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது பதவி நிலையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு ஏனைய வைத்தியசாலையில் இக்கொடுப்பனவு வழங்கப்பட்டு வரும் நிலையில் தமக்கு மாத்திரம் வழங்கப்படுவதில்லை எனவும் கதிர்வீச்சு சிகிச்சையாளர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மற்றும் ஏனைய சில மாவட்டங்களிலிருந்து சிகிச்சை பெற வரும் நோயாளர்கள் பாதிக்கப்படலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# 50 இலட்சம் ரூபா பெறுமதியான வலம்புரி சங்குடன் ஒருவர் கைது!

கொழும்பு, மார்ச் 19

50 இலட்சம் ரூபா பெறுமதியான வலம்புரிச் சங்கை விற்பனை செய்வதற்கு முயன்ற சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பேருவளை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் மொறொன்துடுவ பிரதேசத்தை சேர்ந்த 26 வயதுடையவராவார்.

விமானப்படை புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பேரில் பேருவளை பொலிஸ் ஊழல் தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர், பேருவளை பிரதேசத்தில் உள்ள தேவாலயம் ஒன்றுக்கு அருகில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# 27 வயது காதலியை கொன்ற 22 வயது காதலன் கைதானார்

கொழும்பு, மார்ச் 19

சீதுவை பிரதேசத்தில் தங்கும் அறை ஒன்றில் இரண்டு பிள்ளைகளின் தாயை கொன்ற சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதிக அளவு வலி நிவாரணிகளை உட்கொண்டதால் ஏற்பட்ட உடல்நலக்குறைவு காரணமாக அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நேரம் அது.

மடங்வல, பலாங்கொடை பிரதேசத்தை சேர்ந்த 22 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

பலாங்கொடை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட அவர், சிறைச்சாலை அதிகாரிகளின் மேற்பார்வையில் பலாங்கொடை ஆரம்ப வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சை பெற்று வருகிறார்.

கடந்த 14ஆம் திகதி ரத்தலோவ முத்துவடியா வீதியில் அமைந்துள்ள தங்கும் விடுதியில் 27 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயார் படுகொலை செய்யப்பட்டார்.

அநுராதபுரம் பாமுகொல்லாவ பிரதேசத்தில் வசிக்கும் இரண்டு பிள்ளைகளின் தாயான திலினி சசிகலா பிரியபாஷினி என்ற பெண்ணே கொல்லப்பட்டார்.

22 வயதுடைய இந்த இளைஞனுடன், அந்தப் பெண்ணுக்கு சில காலமாக தொடர்பு வைத்திருந்த இளைஞனே இந்த கொலையை செய்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சீதுவையில் உயிரிழந்த பெண் தங்கியிருந்த தங்கும் அறைக்கு குறித்த இளைஞன் பல தடவைகள் சென்று வந்ததும் தெரிய வந்துள்ளது.

காதலியை கொன்ற பின்னர், அந்த அறைக்குள் தூக்கிட்டு தற்கொலை செய்யும் நோக்கத்துடன் அறைக்குள் தூக்கு கயிறு மாட்டியுள்ளார்.

பின்னர் மனதை மாற்றி, அங்கிருந்து தப்பிச் சென்றார்.

பின்னர், நண்பர் ஒருவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, நடந்தவற்றை தெரிவித்துள்ளார். கடந்த 13ஆம் திகதி இரவு இந்த அறையில் இருந்த சந்தேகநபர் மறுநாள் காலை அறையை விட்டு வெளியேறியதை தங்கும் அறையின் உரிமையாளர் பார்த்துள்ளார்.

# ஜனாதிபதித் தேர்தலை தாமதப்படுத்தமுடியாது

## தேர்தல்கள் ஆணையாளர் கருத்து



**கொழும்பு, மார்ச் 19**

**பொதுத்தேர்தலை முன்கூட்டியே நடத்தினால் கூட அரசாங்கத்தினால் ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போட முடியாது எனதேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

பொதுத்தேர்தலே முதலில் நடைபெறவேண்டும் என தனது கட்சி விரும்புவதாக பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளமை குறித்த கொழும்பு ஊடகம் கேள்விக்கு பதில் அளிக்கையில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்றம் தனது ஆயுட்காலத்தின் இரண்டரை வருடங்களை பூர்த்தி செய்த பின்னர் ஜனாதிபதியால் அதனை கலைக்க முடியும். புதிய தேர்தலை அவர் நடத்தலாம். ஆனால் ஜனாதிபதித் தேர்தல் உரிய நேரத்தில் இடம்பெறுவதை உறுதி செய்யவேண்டியது தேர்தல் ஆணைக்குழுவின் பொறுப்பு.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக பொதுத்தேர்தலை நடத்துவது மிகவும் சவாலான விடயமாக காணப்படும். ஆனால் எவ்வாறான நெருக்கடிகள், சவால்கள் காணப்பட்டாலும் ஜனாதிபதித் தேர்தலை பிற்போடமுடியாது-என்றார்.

எதிர்வரும் வாரங்களில் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்தால் தேர்தலுக்கான நிதியை எவ்வாறு பெறுவதற்கு தேர்தல் திணைக்களம் தீர்மானித்துள்ளது என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், அவ்வாறான நிலைமையேற்பட்டால் ஜனாதிபதி ஒன்றிணைந்த நிதியத்திலிருந்து நிதியை ஒதுக்கவேண்டும் .2024 வரவு-செலவுத்திட்டத்தின் மூலம் ஜனாதிபதி தேர்தலுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை பயன்படுத்த முடியும்-என்றார். (அ)

# சிறிய செயற்திட்டங்கள் ஊடாக பாரிய மாற்றத்தை ஏற்படுத்தலாம்

## வடக்கு மாகாண ஆளுநர் கூறுகிறார்



யாழ்ப்பாணம், மார்ச் 19

நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில், சிறிய செயற்திட்டங்கள் ஊடாக பாரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் மாலை தீவுகளுக்கான ரோட்டறி கழகத்தின் தலைவர் தெரிவு மற்றும் பயிற்சி மாநாட்டின் பிரதம விருந்தினராக கலந்துக் கொண்டு உரையாற்றிய போதே ஆளுநர் இவ்விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

போலியோ தடுப்பு மற்றும் கருப்பைவாய் புற்றுநோய் சிகிச்சை உள்ளிட்டசிறந்த சேவைகளை ரோட்டறி கழகம் முன்னெடுத்துச் செல்வது மகிழ்ச்சி அளிக்கிறது. வசதிகள் இல்லாத மாணவர்கள் பாடசாலை கல்வியை தவிர்த்து வருகின்றனர். வடக்கு மாகாணத்தில் கற்றல் வசதிகள் இல்லாதவர்களை அடையாளம் கண்டு ரோட்டறி கழகம் உதவ முன்வந்துள்ளது. இந்த செயற்பாடுகளுக்கு நன்றி தெரிவித்ததோடு, கல்வியால் முழு சமூக கட்டமைப்பையும் மாற்ற முடியும்.

இதேவேளை, நாட்டின் வடமுனையில் வாழ்ந்துக்கொண்டிருக்கும் மக்களுக்கு பாரிய அளவிலான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டியதற்கான தேவை உள்ளது. அதற்கான சிறிய செயற்திட்டங்களை முன்னெடுக்கவேண்டும்-என்றார். (அ)

# பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் பங்குனித் திங்கள் உற்சவம் ஆரம்பம்







யாழ்ப்பாணம், மார்ச் 19

வரலாற்று பிரசித்தி பெற்ற மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலயத்தில் பங்குனித்திங்கள் உற்சவம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இதன்போது பக்தர்கள் ஆலய கேணியில் நீராடிவிட்டு, அம்மனுக்கு பொங்கல் பூசை செய்து வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

நேற்றைய பங்குனித்திங்கள் உற்சவத்தில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அமைதி விருது விழா யாழில்




யாழ்ப்பாணம், மார்ச் 19

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் 2023ஆம் ஆண்டுக்கான பசுமை அமைதி விருதுகள் விழா நேற்று முன்தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில், பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ், கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ.கலீஸ் ஆகியோர் கலந்து கொண்டிருந்தார்கள்.

இவ் விழாவில் மாணவர்களிடையே அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட சூழல் பொது அறிவுப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களில் முதல் 200 மாணவர்கள் பசுமை அமைதிச் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள்.

இவர்களில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற வெற்றியாளர்களுக்கு சூழலியல் ஆசான் க.சி.குகதாசன் ஞாபகார்த்த பசுமை அமைதி விருதுகள் வழங்கப்பட்டன.

முதலாம் இடத்தைப் பெற்ற யாழ்ப்பாணம் மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த கனிமொழி கணேசானந்தன் தங்கப் பதக்கம் வழங்கியும், இரண்டாம் இடத்தைப் பெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஆனந்தஜோதி அபிஅஷாகர், மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியைச் சேர்ந்த சுதர்சன் வியாசகன் ஆகிய இருவரும் வெள்ளிப்பதக்கங்கள் வழங்கியும், மூன்றாம் இடத்தைப் பெற்ற ஓட்டமாவடி மத்திய கல்லூரியைச் சேர்ந்த முஹம்மட் முஸ்தபா மஹறார் அஹமத் வெண்கலப் பதக்கம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்.

தாலகாவலர் மு.க. கனகராசா ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டு வரும் சிறந்த சூழல்நேயச் செயல்பாட்டாளருக்கான விருதை இம்முறை கொழும்பைச் சேர்ந்த செல்லப்பா கிருபானந்தமூர்த்தி பெற்றிருந்தார். இவருக்கு விருதோடு ஒரு இலட்சம் ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டது.

மேலும், தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் மாணவர்களிடையே நடாத்தப்பட்ட வீட்டுத்தோட்டப் போட்டியில் சிறந்த செய்கையாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்கள் மாணாக்க உழவர்களாகவும், தாவரங்களை அடையாளம் காணும் போட்டியில் அதிக எண்ணிக்கையான தாவரங்களை அடையாளம் கண்டவர்கள் தாவரராவதானிகளாகவும், சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

புலம்பெயர் தமிழர் கூட்டமைப்பின் அனுசரணையுடன் நடைபெற்ற இவ் விருதுகள் வழங்கும் விழா அரங்கு நிறைந்த பார்வையாளர்களுடன் மிகச் சிறப்பாக இடம்பெற்றுள்ளது. இலங்கையில் வழங்கப்பட்டுவரும் சூழல்சார் விருதுகளில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அமைதி விருதுகள் அனைவரினதும் கவனத்தை ஈர்த்த முன்னிலை விருதுகளில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

# போலித் தேசபற்று உள்ளவர்களை மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்

## சஜித் பிரேமதாஸ கோரிக்கை

கொழும்பு, மார்ச் 19

மக்களை தவறாக வழிநடத்தி தேசிய ஒற்றுமையை சீர்குலைத்து, நாட்டையும் சீர்குலைக்கும் போலி தேசபற்றாளர்களை மக்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் ஒரு கட்டமாக மாத்தறையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

சிங்களம் மாத்திரம் தமிழ் மாத்திரம் என தெரிவித்து நாட்டை முன்நோக்கி கொண்டு செல்ல முடியாதெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறு கோஷம் எழுப்புபவர்கள் போலி தேசபற்றாளர்கள் எனவும், அவர்களின் குறுகிய சிந்தனைகளில் ஊடாக எம்மால் உலகை வெற்றி கொள்ள முடியாதென எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். (அ)

# கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம் அதிகாரிகள் ஓரங்கட்டப்படுகின்றனர்

## இம்ரான் எம்.பி. குற்றச்சாட்டு



அம்பாறை, மார்ச் 19

**கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம் அதிகாரிகளுக்கெதிரான விரோதப் போக்கு தொடர்ந்து வருகின்றது. கட்டம் கட்டமாக முஸ்லிம் அதிகாரிகள் ஓரங்கட்டப்பட்டு வருகின்றனர். நிலைமை இன்னும் நீடிக்குமாக இருந்தால் கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம் அதிகாரிகள் எவரும் பணி புரிய முடியாத நிலை ஏற்படலாம் என திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் அச்சம் வெளியிட்டுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர் பதவிகளில் இருந்த முஸ்லிம் அதிகாரிகள் ஆளுநரால் அகற்றப்பட்ட செய்தியை ஏற்கனவே நான் பகிரங்கப்படுத்தியிருந்தேன். அந்த வரிசையில் தற்போது இலங்கை கல்வி நிர்வாக சேவை மூத்த அதிகாரி ஒருவர் எவ்வித பதவியும் வழங்கப்படாது இடமாற்றப்பட்டிருக்கிறார்.

கடந்த காலங்களில் கிழக்கு மாகாணத்தில் இருக்கும் 5 அமைச்சுக்களில் இரண்டு தமிழ் செயலாளர்களும், இரண்டு முஸ்லிம் செயலாளர்களும், ஒரு சிங்கள செயலாளரும் பணியாற்றி வந்தனர். இந்த மாகாணத்தின் இனச் சமநிலையைக் கருத்தில் கொண்டு இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தற்போது கிழக்கு மாகாணத்தில் எந்த ஒரு அமைச்சிலும் முஸ்லிம் செயலாளர்கள் இல்லை. முதலமைச்சு, சுகாதாரம், வீதி அபிவிருத்தி ஆகிய 3 அமைச்சுக்களிலும் தமிழ் செயலாளர்களும், கல்வி, விவசாயம் ஆகிய இரண்டு அமைச்சுக்களிலும் சிங்கள செயலாளர்களும் கடமை புரிகின்றனர். இது இந்த மாகாணத்தில் வாழ்கின்ற ஒட்டு மொத்த முஸ்லிம் சமுகத்தின் பிரதிநிதித்துவத்தையும் கொச்சைப்படுத்துகின்ற செயற்பாடாகும். எனினும், எந்த அரசியல் தலைமையும் இதனைக் கண்டு கொண்டாதாகத் தெரியவில்லை.

இந்த வரிசையில் கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளராக பணியாற்றிய சிரேஷ்ட கல்வி நிர்வாக சேவை அதிகாரியின் பதவி பறிக்கப்பட்டு எந்தவித பதவியும் வழங்கப்படாது அவர் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு உடன் செயற்படும் வண்ணம் இடமாற்றப்பட்டுள்ளார். அமைச்சுச் செயலாளர் பறிப்பு வரிசையில் இது மற்றுமொரு முஸ்லிம் பதவி பறிப்பு சம்பவமாகும். கிழக்கு மாகாணத்தில் சமீப காலமாக அரங்கேற்றப்படும் முஸ்லிம் விரோதப் போக்குகளின் மற்றுமொரு சம்பவம் இதுவாகும். நிலைமை இப்படியே நீடிக்குமாக இருந்தால் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் அதிகாரிகள் எவரும் பணி புரிய முடியாத நிலைமை ஏற்படுத்தப்படலாம்.

ரணில் - ராஜபக்ச ஆட்சியில் முஸ்லிம் விரோதப் போக்கு இன்னும் தொடர்கின்றது என்பதற்கு இவை சிறந்த உதாரணங்களாகும். எனவே. கிழக்கு மாகாண முஸ்லிம் சமுகம் விழித்தெழ வேண்டிய அவசர நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

முஸ்லிம் அரசியல் தலைமைகள் முஸ்லிம் சமுகத்தின் உரிமைகள் தொடர்பாக பேசுவார்கள் என்றெல்லாம் எதிர்பார்க்க முடியாது என்பது இவற்றின் மூலம் தெளிவாகத் தெரிகின்றது.

எனவே, முஸ்லிம் சிவில் சமுக செயற்பாட்டாளர்கள், புத்தி ஜீவிகள், உலமாக்கள் என அனைவரும் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த விடயங்கள் சமுக மயப்படுத்தப்பட வேண்டும். அதன் மூலம் முஸ்லிம் சமுகம் இந்த அநீதிகளுக்கெதிராக ஒன்றுபட வேண்டும். முஸ்லிம் அதிகாரிகள் பாதுகாக்கப்பட வேண்டும் -என்றார். (அ)

# "வாழ்வு சுமந்த வலி" நூல் வெளியீடு



திருமலை, மார்ச் 19

அன்பின் பாதை எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கரவை. மு.தயாளனின் "வாழ்வு சுமந்த வலி" நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

அன்பின் பாதை எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் கனக தீபகாந்தன் தலைமையில் இடம் பெற்ற இந்நூல் வெளியீட்டு விழாவுக்கு பிரதம விருந்தினராக முன்னாள் வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

சிறப்பு விருந்தினர்களாக எழுத்தாளர் நிலாவெளியூர் கெஜதர்மா, ஊடகவியலாளர் ச.திருச்செந்தூரன், வைத்தியர் சி.ஹயக்கிரிவன் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நூலின் முதற்பிரதியை வைத்தியர் சி.ஹயக்கிரிவன் பெற்றுக் கொண்டார். இவ்விழாவில் எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய வட்ட ஆர்வலர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், வைத்தியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு நூலின் பிரதிகளை பெற்றுக் கொண்டனர். (அ)

# திருமலை ரயில் நிலையம் அருகே விபத்து; சம்பவ இடத்திலேயே இளைஞர் உயிரிழப்பு!

திருமலை, மார்ச் 19

திருகோணமலை - ரயில் நிலையத்துக்கு அருகிலுள்ள கிறிஸ்தவ ஆலயத்துக்கு முன்னால் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞரொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.


இவ்விபத்து நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றுள்ளது.

இரு இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டி ருந்தபோது பின்புறமாக வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதாகவும் மூவர் மதுபோதையில் வேகமாக வந்தமையினால் இவ்விபத்து இடம்பெற்றதாகவும் ஆரம்ப கட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

இவ்விபத்தில் திருகோணமலை- கோணேஸ்புரி ஆறாம் கட்டையைச்சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஏ. தேவானந் (வயது-39) என்பவரே உயிரிழந்ததாகவும் அவருடன் பயணித்து அதே பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய யூ.தனூஸன் காயம் அடந்துள்ளதாகவும் தெரிய வந்தது.

அத்துடன் வேகமாகச் சென்று கொண்டிருந்த மற்றைய மோட்டார் சைக்கிள் பயணித்த மூவரும் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# கருத்துச் சுதந்திரம் குறித்து செயலமர்வு





அம்பாறை, மார்ச் 19

பொதுநலவாய அறக்கட்டளையின் நிதியுதவியுடன் கருத்துச் சுதந்திரம் மற்றும் தகவல் உரிமைகளை மேம்படுத்துவதற்கான புதுமையான இடங்களின் ஒரு பகுதியாக, இலங்கை அபிவிருத்தி ஊடகவியலாளர் மன்றம் ஏற்பாடு செய்திருந்த அரச பொறுப்பு மற்றும் பொறுப்புக் கூறல் தொடர்பான செயலமர்வில் அம்பாறை தனியார் விடுதியில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் மக்கள் தொடர்பாடல் அதிகாரிகள் மற்றும் தகவல்துறை அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

அமர்வை அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம ஆரம்பித்து வைத்த இந்த அமர்வில் அம்பாறை மாவட்ட மேலதிக செயலாளர் வி.ஜெகதீசன், வளவாளர் றிப்தி அலி உற்பட பலரும் கலந்து கொண்டனர். (அ)

# பாரதி தமிழ் வித்தியாலய மாணவிகள் தேசிய மட்டத்தில் வென்று சாதனை

திருமலை, மார்ச் 19

தேசிய மட்ட சமூக விஞ்ஞான போட்டியில் கிழக்கு மாகாண திருக்கோணமலை மாவட்ட பாரதி தமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்த இரு மாணவிகள் தேசிய மட்டத்தில் வெற்றி பெற்று வரலாற்று சாதனையை நிலை நாட்டியுள்ளனர்.

தேசிய மட்ட வரலாற்று சாதனையை நிலைநாட்டிய தரம் 8 ஐச் சேர்ந்த த.பிளசியா இரண்டாம் இடத்தையும், தரம் 7 ஐச் சேர்ந்த சீ.அஸ்வினி ஆறாம் இடத்தையும் பெற்றுக்கொடுத்து பாடசாலைக்கும், பாடசாலை சமூகத்துக்கும், மாவட்டத்திற்கும் பெருமையை சேர்த்துக் கொடுத்ததுடன் வரலாற்றுச் சாதனையை நிலைநாட்டியுள்ளனர்.



இம்மாணவர்களை வழிப்படுத்திய அதிபர் சுஜந்தினி யுவராஜா மற்றும் ஆசிரியர்களான அ.அலெக்சாண்டர், திருமதி பா.ரோஷினி ஆகியோர்களுக்கு பாடசாலை அபிவிருத்திக் குழுவினர், பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகள் உள்ளிட்ட பலர் வாழ்த்துக்களை தெரிவித்தனர். (அ)

# செங்கலடி மத்திய கல்லூரிக்கு அதிபராக க.சுவர்ணேஸ்வரன்

மட்டக்களப்பு, மார்ச் 19

மட்டக்களப்பு கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட செங்கலடி மத்திய கல்லூரின் 20 ஆவது அதிபராக க.சுவர்ணேஸ்வரன் பதவியேற்றார்.

நேற்று காலை பாடசாலை அதிபர் கே.குகதாசன் தலைமையில் நடைபெற்ற பதவியேற்பு நிகழ்வில் புதிய அதிபர் க.சுவர்ணேஸ்வரன் பாடசாலை மாணவர்களின் பான்ட் வாத்தியம் முழங்க அதிதிகள் சகிதம் மலர் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டார்.



இதன்போது பாடசாலையின் சரஸ்வதி சிலையில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று மதகுருமாரின் ஆசியுடன் சுப வேளையில் தமது கடமைகளைப் பொறுப்பேற்றார்.


இதன் பின் புதிய அதிபரினை முன்னாள் அதிபர் கே.குகதாசன் வரவேற்று பேசியதுடன், முன்னாள் அதிபருக்கான நன்றி செலுத்தும் நிகழ்வும் பாடசாலை சமூகத்தினரால் நடத்தப்பட்டது. (அ)

# போட்டி இல்லாத தேர்தலில் ஜனாதிபதி ஆகினார் புடின்!

## ஆச்சரியம் ஏதுமில்லை என உலக அளவில் விமர்சனம்

பாரிஸ், மார்ச் 19.

**ரஷ்யாவில் மூன்று தினங்கள் நடைபெற்ற அதிபர் தேர்தல் வாக்களிப்பில் விளாடிமிர் புடின் 2030 ஆம் ஆண்டு வரையான அடுத்த ஐந்தாவது தவணைக் காலத்துக்கு அதிபராகத் தெரிவு செய்யப் பட்டிருக்கிறார் என்று அறிவிக்கப்படுகிறது.**



ஆச்சரியப்பட ஏதுமற்ற தேர்தல் முடிவு இது என்று மேற்குலக செய்தி ஊடகங்கள் புடினின் வெற்றிச் செய்தியில் குறிப்பிட்டுள்ளன.

சுதந்திரமும் உண்மைத் தன்மையும் அற்ற தேர்தல் இது என்று அமெரிக்கா, இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற முக்கிய மேற்கு நாடுகளில் இருந்து கண்டனக் கருத்துகள் வெளியாகியுள்ளன.

உக்ரைன் அதிபர் ஷெலென்ஸ்கி விடுத்த செய்தியில் விளாடிமிர் புடினை அதிகார போதைமிகுந்த ஒரு மனிதர் என்றும் கடைசிவரை அதிகாரத்தில் தொடர விரும்புகின்றவர் என்றும் வர்ணித்திருக்கிறார்.

மூன்றாவது நாளான நேற்றைய வாக்களிப்பு தினத்தின் முடிவில் ரஷ்ய நேரப்படி இரவு எட்டு மணிக்கு வெளியாகிய பூர்வாங்க முடிவுகளின் படி புடினுக்கு ஆதரவாக 87.34% வீதமான வாக்குகள் செலுத்தப்பட்டுள்ளன என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

புடின் தனது அரசியல் எதிராளிகளைத் தீர்த்துக் கட்டிவிட்டுப், போட்டியாளர்கள் எவருமற்ற ஒரு பகட்டான தேர்தலை நடத்தி எதிர்பார்க்கப்பட்டது போலவே அதிகாரத்தில் தொடர்வதை மறுபடியும் உறுதிப்படுத்தியிருக்கிறார் என்றவாறு கடும் விமர்சனங்கள் சர்வதேச அளவில் வெளியாகியுள்ளன.

அதிபர் புடினுக்குச் சவாலான பிரதான அரசியல் எதிராளியாக விளங்கிய அலெக்ஸி நவால்னி சிறையில் மிக மர்மமான சூழ்நிலையில் உயிரிழந்த சில வாரங்களுக்குப் பின்னர் நடந்த இந்தத் தேர்தலில் புடின் பெற்றுள்ள வெற்றி நாடுகடந்து வாழும் அவரது அரசியல் எதிராளிகள் பலராலும் அடாத்தான - மோசடியான-யதார்த்தத்துடன் தொடர்பில்லாத வெற்றி என்று மிகக் கடுமையாக விமர்சிக்கப்பட்டுவருகிறது.

இம்முறை தேர்தலில் புடினுடன் பிரபலமோ அரசியல் பலமோ ஏதுவமேயில்லாத வேறு மூன்று பேர் வேட்பாளர்களாகக் களமிறக்கப்பட்டிருந்தனர். அவர்கள் மிக அரிதான வாக்குகளுடன் தடயம் தெரியாமலே மறைந்துபோய்விட்டனர்.

71 வயதான புடின் 2000 ஆம் ஆண்டு முதல் முறையாக ரஷ்யாவின் அதிபராகத் தெரிவாகியிருந்தார். பின்னர் 2004 இல் மறுபடியும் தெரிவானார். 2008 இல் மூன்றாவது தடவையும் போட்டியிட முடியாத நிலையில் தனது அதிகாரத்தைத் தொடர்வதற்கு பிரதமர் திமித்ரிக்கு வழிவிட்டார். 2012 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் தொடர்ந்து வந்த தேர்தல்களில் மீண்டும் அமோக வாக்குகளோடு தனது சர்வாதிகாரத்தைத் தக்க வைத்துக் கொண்ட அவர் இப்போது உலகப் போர் தொடர்பான பீதிகளுக்கு மத்தியில் ஐந்தாவது பதவிக்காலத்தையும் தன்வசமாக்கியுள்ளார். (அ)



# ரஷ்ய ஜனாதிபதித் தேர்தல் நியாயமாக நடக்கவில்லை!

## அமெரிக்கா விமர்சனம்

லண்டன், மார்ச் 19

ரஷ்யாவில் நடைபெற்ற தேர்தல் சுதந்திரமாக மற்றும் நியாயமாக நடைபெறவில்லை என அமெரிக்கா விமர்சனம் செய்துள்ளது.

விளாடிமிர் புடின் எதிர்க்கட்சி அரசியல் தலைவர்களை சிறையில் அடைத்தார். போராட்டங்களை நடத்த விடாமல் தடுத்தார். எனவே இந்த தேர்தல் சுதந்திரமாகவும் மற்றும் நியாயமாகவும் நடைபெறவில்லை என அமெரிக்க வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு கவுன்சில் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, தேர்தல் நடைபெற்றபோது உக்ரைன் ரஷ்யாவின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் எல்லையோர பகுதிகளில் தாக்குதல் நடத்தியது.

இதற்கு பதிலடி கொடுக்காமல் விடமாட்டோம் என விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

இராணுவ லெப்டினன்ட் கேணல் ஆக இருந்த விளாடிமிர் புடின் 1999 ஆம் ஆண்டு முதல் முறையாக ஆட்சிக்கு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# போலியான செய்திகள் ஜனநாயகத்திற்கு சவால்

## தென்கொரிய ஜனாதிபதி எச்சரிக்கை



சியோல், மார்ச் 19

போலியான செய்திகள் மற்றும் செயற்கை தொழில்நுட்பம் தொடர்பான பொய் செய்திகள் ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக் யோல் தெரிவித்துள்ளார்.

ஜனநாயகத்திற்கான செயலமர்வின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனை அவர் சுட்டிக் காட்டியிருந்தார். இதேவேளை ஜனநாயக விழுமியங்கள் தொடர்பாக , ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா உட்பட உலகளாவிய அதிகாரிகளுடன் கலந்துரையாடலை தென்கொரிய மேற்கொண்டிருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

ஜனநாயத்தை மேம்படுத்தும் வகையில், செயற்கை தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு அனுபவங்களையும் அதற்கான தெளிவையும் நாடுகள் தமக்குள் பகிர்ந்து கொள்வது அத்தியவசியமானது எனவும் தென்கொரிய ஜனாதிபதி யூன் குறிப்பிட்டுள்ளார். (அ)

# 3 ஆம் உலகப் போர் தொலைவில் இல்லை

## ஜனாதிபதியானதும் புடின் எச்சரிக்கை



மொஸ்கோ, மார்ச் 19

“அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகளும் - ரஷ்யாவும் நேருக்கு நேர் மோதினால் மூன்றாம் உலகப் போர் ஏற்படும். ஆனால், அத்தகைய சூழலை இங்கு யாரும் விரும்பவில்லை” என ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற புடின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ரஷ்யாவில் நடந்த ஜனாதிபதி தேர்தலில், 88 சதவீத வாக்குகளுடன் விளாடிமிர் புடின் வெற்றி பெற்றார்.

தொடர்ந்து ஐந்தாவது முறையாகவும் அவர் ஜனாதிபதி அரியணையில் ஏறியிருக்கிறார்.

இதன்போது, கருத்து தெரிவித்த விளாடிமிர் புடின்,

வாக்களித்து வெற்றி பெற செய்த மக்களுக்கு நன்றி.

அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகளும் - ரஷ்யாவும் நேருக்கு நேர் மோதினால் மூன்றாம் உலகப் போர் ஏற்படும்.

ஆனால், அத்தகையச் சூழலை இங்கு யாரும் விரும்பவில்லை.

மூன்றாவது உலகப்போர் வெகு தொலைவில் இல்லை. ஒரே அடி தொலைவில் தான் இருக்கிறது.

அமெரிக்காவில் ஜனநாயகம் இல்லை. அங்கே இப்போது பெரிய குளறுபடியான சூழல் மட்டுமே நிகழ்கிறது.

நிலவரம் அப்படியிருக்க அவர்கள் ரஷ்ய தேர்தல் நியாயமாக நடத்தப்படவில்லை என்று போலி குற்றச்சாட்டுகளை முன்வைப்பது நகைப்புக்குரியது -என்றார். (அ)

# காஸா பகுதியில் 13,000ற்கும் மேற்பட்ட குழந்தைகள் பலி!

## ஐக்கிய நாடுகள் சபை தகவல்

ஜெனிவா, மார்ச் 19

காஸா பகுதியில் நடந்து வரும் மோதல் காரணமாக 13,000 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் உயிரிழந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

மேலும் ஆயிரக்கணக்கான குழந்தைகள் இந்த தாக்குதல்களில் காயமடைந்துள்ளதாக அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

அதிகமான குழந்தைகள் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டை எதிர்கொள்வதாக அந்த அமைப்பு கூறுகிறது.

அத்துடன் இஸ்ரேலுக்கும் ஹமாஸூக்கும் இடையிலான போரினால் காஸா பகுதியில் 2.3 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை-



காசாவில் உள்ள அல்-ஷிஃபா மருத்துவமனையை இஸ்ரேலிய படைகள் சுற்றிவளைத்து துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதன் காரணமாக, அல்-ஷிஃபா மருத்துவமனையில் உள்ள அறுவைச் சிகிச்சை பிரிவில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து அங்கு குண்டுவீச்சு தாக்குதல்களும் மேற்கொண்டுள்ளப்பட்டுள்ளன. (அ)

# பாதாள உலகை சேர்ந்த இருவருக்கு உதவி செய்த குடிவரவு அதிகாரிகள்!

## போலிக் கடவுச்சீட்டுகள் வழங்கிய குற்றச்சாட்டில் சி. ஐ. டியினரால் கைது

கொழும்பு, மார்ச் 19

**போலி கடவுச்சீட்டுகளை வழங்கி நாட்டை விட்டு தப்பிச் செல்ல இரண்டு பாதாள உலக பிரமுகர்களுக்கு உதவிய குற்றச்சாட்டின் பேரில் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் மற்றும் முன்னாள் பிரதிக் கட்டுப்பாட்டாளர் ஆகியோர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

பாதாள உலக பிரமுகர்களான “ஹீனடியன மகேஷ்” என்ற நூரேஷ் சுபுன் தயாரத்ன மற்றும் “மதுகம ஷான்” என அழைக்கப்படும் ஷான் அரோஷ் லியனகே ஆகியோருக்கு இவர்கள் போலி கடவுச்சீட்டுகளை தயாரித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான விசாரணையின் பின்னர், இருவரும் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் சம்பவம் குறித்த கூடுதல் தகவல்களைப் பெற அவர்களிடமிருந்து மேலும் வாக்குமூலம் பெறப்படும் என்றும், மற்ற குற்றவாளிகளுக்கு உதவுவதற்காக அவர்கள் இவ்வாறு கடவுச்சீட்டுக்களைத் தயாரித்துள்ளார்களா என்றும் விசாரணை நடத்தப்படும்.

இந்த கடவுச்சீட்டை தயாரிப்பதற்காக சந்தேகநபர்கள் இருவரும் பெருந்தொகை பணத்தை பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பிரதி கட்டுப்பாட்டாளரான சந்தேகநபர், “ஹீனடியன மகேஷுக்கு” போலி கடவுச்சீட்டை வழங்கியதாகவும், திணைக்களத்தின் முன்னாள் பிரதி கட்டுப்பாட்டாளர் “மத்துகம ஷானுக்கு” போலி கடவுச்சீட்டை தயாரித்ததாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

“ஹீனடியன மகேஷ்” என்பவருக்கு தயாரிக்கப்பட்ட கடவுச்சீட்டில் போலி கடவுச்சீட்டு இலக்கம் மற்றும் போலி தேசிய அடையாள அட்டை இலக்கத்துடன் “மணிக்குகே தினேஷ் சில்வா” என்ற பொய்யான பெயர் உள்ளிடப்பட்டுள்ளது.

இதேவேளை, திணைக்களத்தின் முன்னாள் பிரதிக் கட்டுப்பாட்டாளர் டொனகொடலியனகே குமார ஜயசிங்க என்ற போலியான பெயரில் “மதுகம ஷானுக்கு” போலி கடவுச்சீட்டை தயாரித்துள்ளதாக கூறப்படுகிறது.

குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் பிரேமரத்னவின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் முன்னாள் பிரதி கட்டுப்பாட்டாளர் என சந்தேகிக்கப்படும் அவர் தற்போது ஓய்வூதிய திணைக்களத்தில் பிரதிப் பணிப்பாளராக கடமையாற்றி வருவதாக குற்றப் புலனாய்வு திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

இந்த இரு அதிகாரிகளின் நடத்தை தொடர்பில் உள்ளக விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# பாடசாலை மாணவனைத் தாக்கிய பெரமுனவின் முன்னாள் உறுப்பினர்!

கொழும்பு, மார்ச் 19

பாடசாலை மாணவனை தாக்கிய திவுலப்பிட்டிய உள்ளூராட்சிச் சபையின் பொதுஜன பெரமுனவின் முன்னாள் உறுப்பினர் ஒருவரைக் கைது செய்வதற்கான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளான தனது மகன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஐந்து நாட்களாகியும், சந்தேகத்திற்குரியவர் இதுவரை கைது செய்யப்படவில்லை என குறித்த மாணவனின் தாய் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கடந்த 11ஆம் திகதி, பாடசாலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவனை, பந்துராகொட நகரில் வைத்து உள்ளூராட்சிச் சபையின் முன்னாள் உறுப்பினர் தாக்கியுள்ளார்.

பந்துராகொட பிரதேசத்தில் வசிக்கும் 16 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவரே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார்.

தாக்குதலின் பின்னர் சந்தேகத்திற்குரியவர் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (அ)

# தானியங்கள் கொள்வனவு செய்வோர் அவதானத்துடன் செயல்படவேண்டும்!

கொழும்பு, மார்ச் 19

பண்டிகைக் காலங்களில் தானிய வகைகளைக் கொள்வனவு செய்பவர்கள் மிகவும் அவதானத்துடன் செயற்படவேண்டுமென பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவிக்கையில்-

பூச்சிகளால் தானியங்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை தவிர்க்கும் வகையில், சில வியாபாரிகள் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற இரசாயனங்களை சேர்க்கின்றனர்.

இதன்காரணமாக சந்தையில் காணப்படும் சந்தேகத்திற்கிடமான தானியங்களை பரிசோதிக்கும் பணியில் உணவுப்பொருள் பரிசோதகர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் நச்சுப் பொருள் அடங்கிய இரசாயனங்கள் கலந்து விற்கப்படும் தானியங்கள் மற்றும் பிற பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே தானியங்களை கொள்வனவு செய்பவர்களும் அவதானத்துடன் செயற்பட வேண்டும்- என்றார். (அ)

# பதிவு செய்யப்படாத கதிரியக்க நிபுணர், தாதி மூலம் சிகிச்சை!

## இலங்கையின் பிரபல தனியார் வைத்தியசாலை மீது வழக்கு!

கொழும்பு, மார்ச் 19

இலங்கை மருத்துவ சபையின் பதிவு செய்யப்படாத கதிரியக்க சிகிச்சை நிபுணரையும், பதிவு செய்யப்படாத தாதி ஒருவரையும் வைத்து சிகிச்சை மேற்கொண்டு, சிகிச்சைக்காக வந்த நோயாளி ஒருவருக்கு ஆபத்தை ஏற்படுத்தியதாக கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் உள்ள பிரதான தனியார் வைத்தியசாலைக்கு எதிராக கொள்ளுப்பிட்டி பொலிஸார் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

பதிவு செய்யப்படத கதிரியக்க நிபுணரான சரத்சந்திர அலகஹவத்த மற்றும் பயிற்சி பெறாத தாதி எனக் கூறப்படும் நிமாலி மதுகா விஜேசேகர ஆகியோர் இந்த வழக்கின் ஏனைய சந்தேக நபர்களாக பெயரிடப்பட்டுள்ளனர்.

கொழும்பு 3 பகுதியைச் சேர்ந்த ஜனக மஹிஷ மீகமகே செய்த முறைப்பாட்டின் பிரகாரம், இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது. (அ)

# தனியார் பஸ்களில் தேர்தல் பிரசார சுவரொட்டி ஒட்ட அனுமதியில்லை!

## தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம்

கொழும்பு, மார்ச் 19

எந்தவொரு அரசியல் கட்சிக்கும் தேர்தல் பிரசாரங்களுக்காக தனியார் பஸ்கள் வழங்கப்படும். ஆனால் பஸ்ஸில் ஸ்ரிக்கர்கள் அல்லது சுவரொட்டிகள் ஒட்ட அனுமதிக்கப்படாது என்று இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

பஸ்கள் வாடகைக்கு வழங்கப்படும் என்றும், தேர்தல் பிரசாரத்திற்காக பஸ்களை வாடகைக்கு எடுக்கும் வேட்பாளர் அல்லது அரசியல் கட்சிகள் பஸ் அல்லது பஸ்களின் பொறுப்பை ஏற்க வேண்டும் என்றும் அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பஸ்ஸில் ஸ்டிக்கர்கள் மற்றும் போஸ்டர்கள் ஒட்டுவதால் அதன் பெயிண்ட் மற்றும் உலோகம் சேதமடையும்.

முந்தைய தேர்தல்களின் போது கூட, எங்கள் பேருந்துகள் தேர்தல் பிரசாரங்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டன.

எவ்வாறாயினும், அரகலய காலத்தில் தனியார் பேருந்துகளுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதங்கள் இன்னும் சரி செய்யப்படவில்லை.

சில பஸ்கள் அவற்றின் உரிமையாளர்களால் பழுதுபார்க்கப்பட்டன, ஆனால் இன்னும் பல பேருந்துகள் பழுதுபார்க்கும் இடங்களில் உள்ளன.

எனவே இவ்விடயம் தொடர்பில் அவதானித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு அந்த பஸ்களை சீர்செய்து சேவைக்கு கொண்டு வரவேண்டும்-என்றார். (அ)

# வேலைக்காக வெளிநாட்டுக்கு சென்ற பொலிஸ் அதிகாரிகள்!

கொழும்பு, மார்ச் 19

நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் பரிசோதகர், தெல்தெனிய பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் உப பொலிஸ் பரிசோதகர் மற்றும் ஹோமாகம பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகியோர் பொலிஸ் சேவையில் இருக்கும் போதே இரகசியமாக வெளிநாட்டில் வேலை தேடிச் சென்றுள்ளதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த மூன்று உத்தியோகத்தர்களுக்கும் சேவையில் இருந்து விலகுமாறு உத்தரவு பிறப்பிக்க நுகேகொடை மற்றும் கொழும்பு தெற்கு பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் பரிசோதகர் பெப்ரவரி 03 ஆம் திகதி முதல் கடமைக்கு சமுகமளிக்கவில்லை எனவும் அவர் பெப்ரவரி 13 ஆம் திகதி நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

தெல்தெனிய உப பொலிஸ் பரிசோதகரும் பெப்ரவரி 03 ஆம் திகதி முதல் பணிக்கு சமூகமளிக்காமல் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

ஹோமாகம பொலிஸ் கான்ஸ்டபிள் 2023ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் திகதி இரண்டு நாள் விடுமுறை எடுத்துவிட்டு பணிக்கு திரும்பவில்லை. அதை விசாரித்ததில், அவர் நாட்டை விட்டு வெளியேறியது தெரியவந்துள்ளது.

பதுளைப் பிரிவின் குற்றப் புலனாய்வுப் பிரிவின் நிலைய பொறுப்பதிகாரி நாட்டை விட்டு வெளியேறியது கடந்த வாரம் தெரியவந்தது.

பொலிஸ் இன்ஸ்பெக்டராக உள்ள அந்த அதிகாரி, உயர் அதிகாரிகளுக்கு எந்த அறிவிப்பும் இல்லாமல் உரிய அனுமதியின்றி நாட்டை விட்டு வெளியேறியுள்ளார். இதன்படி, கடந்த 14ஆம் திகதி அவரை பணியிலிருந்து இடைநிறுத்துவதற்கு பதுளை பொலிஸ் அத்தியட்சகர் நடவடிக்கை எடுத்தார்.

இந்த அதிகாரியின் மனைவியிடம், இது குறித்து மூத்த பொலிஸ் அதிகாரிகள் கேட்ட போது, தனது கணவர் வேலைக்காக நாட்டை விட்டு வெளியேறியதாக அவர் கூறினார்.

கடந்த காலங்களில் பொலிஸ் சேவையில் ஈடுபட்டிருந்த பல பொலிஸார் இவ்வாறு நாட்டை விட்டு வெளியேறியிருந்தனர். இவர்களில் பொலிஸ் விளையாட்டுப் பிரிவைச் சேர்ந்த குழுவொன்று சர்வதேச பொலிஸ் சங்கத்தின் மாநாட்டில் பங்குபற்றச் சென்ற பின்னர் காணாமல் போனமை தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. அத்துடன் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் பரிசோதகர் ஒருவர் தமக்கு பாதாள உலக அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறி பிரான்ஸ் நாட்டுக்கு சென்று தஞ்சம் புகுந்துள்ளார். (அ)

## வெடுக்குநாறி...

முன்னெடுக்கப்படவுள்ளது.

தமிழர் தாயகம் மீதான திட்டமிட்ட தொல்லி யல் ஆக்கிரமிப்புக்களுக்கு எதிராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சமூகமாக அணிதிரள்வோம் என்று மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பாராளுமன்ற...

நல்லிணக்கம் பற்றிய கணக்கெடுப்பு' என்ற தலைப்பில் நடத்தப்பட்ட இந்த ஆய்வில், கடந்த ஜனவரி மாதம், 25 மாவட்டங்களில் ஆயிரத்து 350 பேர் பங்கேற்றனர்.

ஆய்வின்படி, இராணுவம் மற்றும் நீதிமன்றங்கள், நாட்டின் மிகவும் நம்பகமான நிறுவனமாக அந்தஸ்தை அனுபவிக்கின்றன.

அதேசமயம், இராணுவம் மற்றும் நீதிமன்றங்களுடன் ஒப்பிடும்போது, பொலிஸ் துறை, ஒப்பீட்டளவில் குறைவான மக்கள் நம்பிக்கையை கொண்டுள்ளது.

இராணுவம் மற்றும் நீதிமன்றங்களுடன் ஒப்பிடுகையில், சட்டமியற்றும் நிறுவனங்கள் மற்றும் சட்டத்தை உருவாக்குவதில் பங்கேற்கும் நிறுவனங்கள், அரசியல் கட்சிகள் மீதான பொது மக்களின் நம்பிக்கை குறைவடைந்துள்ளது.

கடந்த தசாப்தத்தில், இது பெரும் சரிவை சந்தித்துள்ளது.

2011 ஆம் ஆண்டு, 63 வீதமான மக்கள் பாராளுமன்றத்தை நம்பினர்.

ஆனால், 2024 இல், 22 வீதமான மக்கள் பாராளுமன்றத்தை நம்புகின்றனர்.

இந்தக் கணக்கெடுப்புத் தொடரில் சோதிக்கப்பட்ட நிறுவனங்களில்,

அரசியல் கட்சிகள் மீது, மக்களின் நம்பிக்கை பெருமளவில் குறைந்துள்ளது.

அரசியல் கட்சிகள் மீதான மக்களின் நம்பிக்கை, 2011 ஆம் ஆண்டு 56 வீதமாக இருந்த நிலையில், 2024 இல், 19 வீதமாக குறைந்துள்ளது.

இதேவேளை, ஏறத்தாழ பத்தில் ஒரு இலங்கையர்கள், சர்வாதிகார ஆட்சிக்கு விருப்பம் தெரிவித்துள்ளனர்.

பெரும்பான்மையான மக்கள், ஜனநாயக ஆட்சியை ஆதரிக்கின்ற போதிலும், ‘சில சந்தர்ப்பங்களில், ஜனநாயக ஆட்சியை விட, சர்வாதிகார அரசாங்கம் விரும்பத்தக்கதாக இருக்கும்’ என்ற கருத்தை முன்வைத்துள்ளனர் என மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தெரிவித்துள்ளது.

## ஆசிய...

நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இந்த நிறுவனங்கள் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 52 சதவீத பங்களிப்பை வழங்குகின்றன.

குறித்த நிறுவனங்களில் 45 சதவீத பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

எனவே, சிறிய நடுத்தர நிறுவனங்களுக்கு, குறிப்பாக பெண்கள் தலைமையிலான நிறுவனங்களுக்கு, பொருளாதாரத்தில் தமது துறையின் பங்களிப்பை நிலைநிறுத்தவும் அபிவிருத்தியடையவும் தேவையான ஆதரவை வழங்குவது அவசியமானதாகும்.

அதன்படி, இந்த திட்டம் செயல்பாட்டு மூலதனத்தை வழங்குவதுடன், தமது செயல்பாடுகளை விரிவுபடுத்தவும், மாறிவரும் காலநிலைக்கு ஏற்ப தயார்படுத்தல்களை மேற்கொள்வதற்கும் உதவும்.

இதற்காக பெண்கள் தலைமையிலான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான உத்தரவாத மானியங்களை ஈடுகட்டுவதற்கு 5 இலட்சம் அமெரிக்க டொலர் விசேட வசதியையும் இந்த திட்டத்தின் ஊடாக வழங்கவுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## தமிழ் அரசின்...

தலைமை பதவி மற்றும் கட்சியின் நிர்வாகத்துக்கு மீளவும் தேர்தலை நடத்தத் தயராகவுள்ளதாக தமிழ் அரசு கட்சியினர் நீதிமன்றத்துக்கு தெரிவித்திருந்தனர். இந்த வழக்கு மீண்டும் ஏப்ரல் 5ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

இந்த நிலையில், கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு எம். ஏ. சுமந்திரன் எம். பி. அளித்த நேர்காணலின் முக்கிய அம்சங்கள் வருமாறு,

தமிழ் அரசு கட்சியின் தலைவர் பதவிக்கு தெரிவானால் இணைந்து செயல்படுவோம் என்றே அறிவித்தோம். மற்றைய பதவிகளுக்கும் இருவரும் இணைந்து - இணக்கமாக யாரை நியமிப்பது என்பதைத் தீர்மானித்தோம். அதற்கு ஏற்பவே தீர்மானங்களை பொதுச் சபைக்கு அறிவித்தோம். அங்கு குழப்பங்கள் ஏறபட்டன. அவர்கள் கேட்டதன் பெயரில் வாக்கெடுப்புக்கு விட்டோம். அதுவும் நிறைவேற்றப்பட்டது. மறுநாளே கட்சியின் தேசிய மாநாடு நடந்து முடிந்திருக்க வேண்டும். புதிய நிர்வாகம் முடிவான பிறகும் சிலர் குழப்பத்தை ஏற்படுத்தினர்.

தேசிய மாநாட்டை பிற்போட வேண்டாம் என்று தலைவருக்கும் (மாவை சேனாதிராசா) புதிய தலைவருக்கும் (சிறீதரன்) சொன்னேன். மாநாட்டில் புதிய தலைவர் பதவியை பொறுப்பேற்க வேண்டும் என்றும் கூறினேன். பிறகு கடிதம் மூலம் பகிரங்கமாகவும் கூறியிருந்தேன். ஆனால், அதன் பின்னரும் 3 வாரங்கள் மாநாடு நடக்கவில்லை.

பின்னர் தொடுக்கப்பட்ட வழக்கில் ஜனவரி 21, 27ஆம் திகதிகளில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் எவற்றையும் நடைமுறைப்படுத்தக்கூடாது என்று திருகோணமலை நீதிமன்றம் இடைக்கால தடை விதித்தது.

இதன் பின்னர் புதிய தலைமை - புதிய நிர்வாகத்தை தெரிவு செய்வதாக கட்சியினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். கட்சி சார்பான அனைத்து வழக்குகளையும் இதுவரை நானே கையாண்டிருக்கிறேன். இது விடயத்தில் என்னிடத்தில் ஆலோசனை கேட்கப்படவில்லை. நானும் எதிராளியாக இருப்பதாலோ என்னவோ என்னிடம் ஆலோசனை கேட்கப்படவில்லை.

தலைமைப் பதவிக்கான தேர்தலில் எனது பெயரை பிரேரிக்கிறபோது நான் இணக்கம் தெரிவித்தே அதில் போட்டியிட்டேன். இனிமேல் தலைவராக இருக்க மாட்டேன் என்று நான் சொல்லப்போவது இல்லை.”, என்று கூறியிருந்தார். (ஐ)

## சுமூகத் தீர்வை...

தெரிவித்துள்ள நிலையில், அந்த வழக்கில் முன்னிலையாகாத எதிராளிகளில் ஒருவரான சுமந்திரன் தனது கருத்தை பதிவு செய்வதற்காகவே இந்த வழக்கு தவணையிடப்பட்டிருந்தது.

எனவே, எதிர்வரும் ஏப்ரல் 5ஆம் திகதி சட்டத்தரணியும் பாராளுமன்ற உறுப்பினருமான எம். ஏ. சுமந்திரன் நீதிமன்றில் முன்னிலையாவார். ஜனாதிபதி சட்டத்தரணியான அவர் மன்றில் தனக்காகத் தானே வாதிடுவார் என்று கூறப்படுகின்றது. இதனால், அன்றைய தினம் அதற்கான அனுமதியைப் பெறும் நோக்கில் ஆவணங்களை சமர்ப்பிப்பார் என்று தெரிகின்றது.

நீதிமன்றின் அனுமதியை பெற்ற பிற்பாடு - சுமந்திரன் தனது கருத்தை நீதிமன்றுக்கு தெரியப்படுத்துவார். இதன் போது, கட்சியினர் முன்னர் மன்றுக்கு அளித்த நிலைப்பாட்டுக்கு மாறான கருத்தை வெளியிடாதவாறான இணக்கத்தை தமிழ் அரசு கட்சியின் அரசியல் குழு எட்டியுள்ளது. எனவே, மிகக் குறுகிய காலத்திலேயே - அதாவது ஓரிரு நீதிமன்ற தவணையிலேயே வழக்கை நிறைவுக்கு கொண்டுவரும் வகையில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டிக்கின்றது என்று அறிய வருகின்றது. (ஐ)

# “மகிந்தமீது பொறாமை இல்லை”



கொழும்பு, மார்ச் 19

மகிந்த ராஜபக்ஷவுடன் எங்களுக்கு அரசியல் ரீதியான போட்டிகள் உள்ளன. ஆனால், பொறாமைத்தனமோ - முட்டாள்தனமான எண்ணங்களோ இல்லை என்று கூறியிருக்கிறார் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ.

மாத்தறை மகிந்த ராஜபக்ஷ பாடசாலைக்கு பேருந்து ஒன்றை கையளித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் ஆற்றிய உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

மகிந்த ராஜபக்ஷவுடன் எங்களுக்கு அரசியல் ரீதியான போட்டிகள் உள்ளன. ஆனால், பொறாமைத்தனமோ - முட்டாள்தனமான எண்ணங்களோ இல்லை. இதனாலேயே மாத்தறை மகிந்த ராஜபக்ஷ கல்லூரிக்கு பஸ்ஸைக்கூட நன்கொடையாக வழங்கி வைத்தோம். மகிந்த ராஜபக்ஷவின் பெயரை விட இப்பாடசாலையின் பிள்ளைகளின் எதிர்காலமே எமக்கு முக்கியமானது.

முறைமையியல் மாற்றம் குறித்து பல விரிவுரைகள் கருத்துரைகள் நடந்தாலும், அது களத்தில் யதார்த்தமாக இருக்க வேண்டும். கொழும்புக்கு ஒரு கவனிப்பும் கிராமத்துக்கு மற்றுமொரு கவனிப்பும் காட்டாது அனைவருக்கும் சமமான கல்விக்கான வாய்ப்பை வழங்கும் நோக்கில் இந்த பேருந்துகளும் ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு உதவி வழங்குவதால் எனக்கு “பஸ் மான்” (டீரள அயஒ) என்று பெயர் சூட்டினர், இவ்வாறு ”பஸ் மான்” என்று பெயர் சூட்டியவர் கல்வி கற்ற பாடசாலைக்கும் பேருந்து வழங்கப்பட்டுள்ளது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் கூறினார். (ஐ)

## 16 அம்ச...

இயந்திரமொன்றை ஸ்தாபிப்பது உட்பட இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவை பலப்படுத்துவதை முதற் கட்டமாக செயற்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சார்பில் 14 அம்சக் கோரிக்கைகளை நடைமுறைப்படுத்த ஒப்புக்கொண்டுள்ளதுடன் ஏனைய இரண்டு அம்சங்களைப் படிப்படியாக அமுல்படுத்துவதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை சுங்கம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் போன்றவற்றில் இடம்பெறும் ஊழல் மோசடிகளை நிறுத்துவதற்கான செயன்முறை நிர்ணயிக்கப்பட்டதன் பின்னர் இவ்விரு விடயங்களையும் நிறைவு செய்வதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என்றும் இந்த கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கோப்...

இந்த நோக்கத்திற்காக, 2015-2019 அரசாங்கம் கோப் மற்றும் கோபா ஆகிய இரண்டு முக்கிய குழுக்களுக்கான தலைவர்களை எதிர்க்கட்சியிலிருந்து நியமிக்கும் சிறந்த நடைமுறையை பின்பற்றியதாக பாராளுமன்ற உறுப்பினர் விக்கிரமரத்ன சுட்டிக்காட்டினார்.

“பரிசோதனை செய்யப்பட்ட கணக்குகள், வரவு செலவு கணக்குகள் மற்றும் மதிப்பீடுகள், நிதி நடைமுறைகள், பெரு நிறுவனங்கள் மற்றும் பிற அரசு வணிக நிறுவனங்களின் செயல்திறன் மற்றும் மேலாண்மை குறித்து பாராளுமன்றத்துக்கு அறிக்கை செய்வது குழுவின் கடமையாகும். கோப் நிறுவப்பட்டு 45 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், அது தேவையற்ற குழுவாக மாறியுள்ளது. நிலையியற் கட்டளைகளில் உள்ள வரம்புகள் காரணமாக தவறான நிர்வாகமும் ஊழலும் பெருமளவில் கட்டுப்படுத்தப்படாமல் போய்விட்டது. நிலையியற் கட்டளை விரிவுபடுத்தப்பட வேண்டும், அங்கு முறைகேடுகள் மற்றும் மோசடிகள் வெளிச்சத்தில் இருக்கும்போது, சட்டமா அதிபருக்கு நேரடியாகச் சென்று இலஞ்ச ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும். நிலையியற் கட்டளைகளை மட்டுப்படுத்துவதன் மூலம் அரசாங்கம் செயல்முறையைத் தடுக்கிறது, இதனால் கோப்பின் செயல்திறன் இப்போது கேள்விக்குறியாகியுள்ளது” என்று அவர் கூறினார்.

கோப் குழுவின் நோக்கத்தை மீள்பரிசீலனை செய்வதற்கும் நிலையியற் கட்டளைகளை விரிவுபடுத்துவதற்கும் இதுவே சரியான தருணம் என அவர் கருத்து தெரிவித்தார். (அ)

## கைது...

ஆணையாளர் மிகவும் கவலையடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சித்திரவதை குற்றச்சாட்டில் உயர் நீதிமன்றத்தினால் தண்டனை வழங்கப்பட்ட தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபராக நியமித்தமை தொடர்பிலும் பேரவையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டமை இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்ட முக்கிய தருணமாக பார்க்கப்படுவதாக சுதேஷ் நந்திமால் சுட்டிக்காட்டியுள்ளார். இதன்படி, சிறைக்கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் குழு மற்றும் கூட்டு மையம் இணைந்து ஐக்கிய நாடுகள் சபையிடம் இந்த ஆவணத்தைக் கையளித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட கடத்தல்கள் தொடர்பிலும் இந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

வெளிநாடுகளில் இருந்து வரும் சிலர் வலுக்கட்டாயமாக கடத்தப்படுவதாக கைதிகளின் உரிமைகள் பாதுகாப்பு குழுவின் பணிப்பாளர் சபையின் தலைவர் சுதேஷ் நந்திமால் மேலும் தெரிவித்தார்.

## பல்கலைக்...

அரசாங்கமும் இதுவரை தீர்வு வழங்கப்படாததை எதிர்த்தும் உடனடியாக தீர்வு வழங்குமாறு வலியுறுத்தியுமே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன் அடிப்படையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் இன்று முழுநாளும் அடையாள வேலை நிறுத்தப் போராட்டமும் முற்பகல் 11 மணியளவில் பல்கலைக்கழக முன்றலில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டமும் நடைபெறும் யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## 14 வயது...

சந்தேகநபர்களில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் 70 வயதான தந்தையும் உள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் சிகை அலங்கரிப்பு நிலையத்தின் உரிமையாளரும் மற்றொரு நபரும் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களான 11 பேரையும் கைது செய்யப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# பஸ் சில்லுக்குள் சிக்கி முதியவர் உயிரிழப்பு!

### சாரதி பொலிஸாரால் கைது

வவுனியா, மார்ச் 19

வவுனியா பூவரசங்குளத்தில் பஸ்ஸில் ஏற முற்பட்ட வரை பஸ் மோதியதில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்த சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

சம்பவ இடத்துக்கு சென்ற பூவரசங்குளம் பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன் னெடுத்து வருவதோடு, பஸ்ஸின் சாரதியையும் கைது செய்தனர்.

இவ் விபத்தில் பூவரசங்குளம் மணியர்குளம் பகுதி யினை சேர்ந்த 76 வயதுடைய சிவக்கொழுந்து வள்ளிப் பிள்ளை என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (அ)

# 8 ஆவது சர்வதேச ஒத்துழைப்பு மன்றத்தின் மாநாடு கொழும்பில்

கொழும்பு, மார்ச் 19

தெற்காசிய பிராந்தியத்தில் விமான பாதுகாப்பு மேம் பாட்டிற்காக ஐரோப்பிய விமான பாதுகாப்பு முகவர கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 8ஆவது சர்வதேச ஒத்துழைப்பு மன்றத்தின் மாநாடு கொழும்பில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

கொழும்பில் உள்ள விருந்தகமொன்றில் தொடர்ச்சி யாக 3 நாட்கள் இந்த மாநாடு இடம்பெறவுள்ளது.

குறித்த மாநாட்டில் ஐரோப்பா, ஆபிரிக்கா மற்றும் ஆசிய நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 100 சிரேஷ்ட விமான போக்குவரத்து நிபுணர்கள் கலந்துகொள்ளவுள் ளனர்.

சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபையின் அனுசரணையுடன் இந்த மாநாடு இடம்பெறவுள்ளது.

# தயாசிறி எம்.பி. தலைமையில் மனிதநேய மக்கள் கூட்டணி!

### நாளை உதயமாகிறது



கொழும்பு, மார்ச் 19

**சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரான பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தலைமையில் புதிய தொரு அரசியல் கூட்டணி உதயமாகவுள் ளது.**

18 கட்சிகள், சிவில் அமைப்புகள் மற்றும் தொழிற்சங் கங்கள் இணைந்துள்ள இக்கூட்டணிக்கு மனிதநேய மக் கள் கூட்டணி என பெயரிடப்பட்டுள்ளது எனவும், எதிர் வரும் நாளை புதன்கிழமை அங்குரார்ப்பண நிகழ்வு இடம் பெறும் எனவும் ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது.

கொழும்பு, லக்ஷ்மன் கதிர்காமர் மத்திய நிலையத் தில் 20 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு இதற்கான நிகழ்வு நடைபெறவுள்ளது.

அடுத்த தேர்தலை இலக்குவைத்தே இக்கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளது.

"எனக்கு ஜனாதிபதி என்ற பதவி ஆசை இல்லை. எனி னும், கூட்டணியில் உள்ளவர்கள் கோரிக்கை விடுத்தால் சவாலை ஏற்று ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட தயார்." - என்று பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜய சேகர தெரிவித்தார். (அ)

# ஐக்கிய மக்கள் சக்திக்குள் பிளவு ஹர்ஷ அணி விலகத் தீர்மானம்!

கொழும்பு, மார்ச் 19

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளு மன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தலைமையிலான அணியொன்று கட்சியை விட்டு விலகிக் கொள் ளும் தீர்மானத்தில் இருப்பதாக தெரியவருகிறது.

ஹர்ஷ டி சில்வா, ராஜித சேனா ரத்ன, பீல்ட் மார்ஷல் சரத் பொன் சேகா, ரோஹினி கவிரத்ன, தலதா அதுகோரல உள்ளிட்டவர்களே இவ்வாறு கட்சியை விட்டு விலகி தனித்துச் செயற்படுவது தொடர் பில் ஆலோசித்து வருவதாக தெரி விக்கப்படுகிறது.

பெரும்பாலும் எதிர்வரும் சில வாரங்களுக்குள் இந்த மாற்றம் இடம்பெறுமென எதிர்பார்க்கப்ப டுகிறது.

இதன்படி, குறித்த ஐவரும் அல் லது மேலும் சிலரை இணைத்து கொண்டு ஆளுங்கட்சியில் இணைந் துகொள்ளத் தீர்மானித்துள்ளதாக வும் தெரியவருகிறது.

இந்த நிலையில், ஐக்கிய மக்கள் சக்திக்குள் ஏற்படும் பிளவைத் தடுப் பதற்காக சஜித் தரப்பில் இதுவரை எந்தவொரு ஆக்கபூர்வமான நடவ டிக்கையும் முன்னெடுக்கப்பட வில்லை என்றும் தெரிவிக்கப்படு கின்றது. (அ)

# மயிலத்தமடு பிரச்னை வழக்கின் தீர்ப்பு நாளை

மட்டக்களப்பு, மார்ச் 19

மட்டக்களப்பு - மயிலத்தமடு மாதவனை பிரச்னைக்கு தீர்வை வழங்குமாறு கோரி ஜனாதிபதியை வலியுறுத் தும் வகையில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் தொடர்பான வழக்கின் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டுள் ளது.

மட்டக்களப்பு - ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

வழக்கின் தீர்ப்பு நேற்று வழங்கப்படவிருந்த நிலை யில், நீதவான் மன்றுக்கு வருகை தராமையால் வழக்கின் தீர்ப்பை 2 நாட்களுக்கு ஒத்திவைக்க ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற பதில் நீதவான் வி.தியாகேஸ்வரன் உத்தரவிட் டுள்ளார்.

அதற்கமைய வழக்கின் தீர்ப்பு நாளை வழங்கப்பட வுள்ளது.

கடந்த ஒக்டோபர் 8ஆம் திகதி மட்டக்களப்பு செங்க லடி பகுதிக்கு ஜனாதிபதி வருகை தந்த சந்தர்ப்பத்தில் மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை பிரச்சினைக்கு தீர்வு கோரி வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் முன்னெடுக் கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பில் பாராளுமன்ற உறுப் பினர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், பண் ணையாளர்கள் , சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறுப்பினர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட 37 பேருக்கு எதிராக வழங்கு தொடரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கிணற்றில் தவறி விழுந்து வவுனியாவில் யுவதி பலி!

வவுனியா, மார்ச் 19

வவுனியா, சமனங்குளம் பகுதியில் தோட்ட கிணற்றில் தவறி விழுந்து இளம்பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வவுனியா, சமனங்குளம் பகுதியில் வசித்து வரும் இளம்பெண் ஒருவர் நேற்று முன்தினம் மாலை, வீட்டின் கிணற்றுக்கு அருகில் இருந்த மோட்டரின் குழாய் கழன் றமையால் அதனை சரிப்படுத்த முயற்சித்தபோது கிணற் றுக்குள் தவறி விழுந்துள்ளார்.

தொடர்ந்து மோட்டர் இயங்கிக் கொண்டிருப்பதை அவதானித்த அயல் வீட்டார் கிணற்றடிக்குச் சென்று பார்த்தபோது குறித்த இளம்பெண் கிணற்றில் விழுந்து இருந்ததை அவதானித்துள்ளனர்.

இதனையடுத்து அயலவர்களின் உதவியுடன் யுவ தியை மீட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதித்த போது அவர் உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

சம்பவத்தில் வவுனியா சமனங்குளம் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய தவரூபன் லக்சிகா என்ற இளம் பெண்ணே உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்பட்டது.

# உரும்பிராய் விபத்தில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

உரும்பிராய் பகுதியில் நேற்று முன் தினம் இடம் பெற்ற வீதி விபத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த விபத்து சம்பவம் நேற்று முன் தினம் உரும்பி ராய் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

உரும்பிராய் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அரு கில் முச்சக்கரவண்டியொன்று செயலிழந்த நிலையில் அதனை பரிசோதித்துக்கொண்டிருந்தவர் மீது பின்னால் வந்த பட்டா ரக வாகனமொன்று மோதியதினாலேயே விபத்து சம்பவித்துள்ளது.

இந்நிலையில் காயமடைந்தவர் யாழ் போதனா வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரு வதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# கிளிநொச்சி குடமுருட்டிக்குளத்தின் கீழ் 360 ஏக்கர் நிலம் சிறுபோகத்திற்கு தயார்

கிளிநொச்சி, மார்ச் 19

கிளிநொச்சியிலுள்ள குடமுருட்டிக்குளத்தின் கீழ் 360 ஏக்கரில், சிறுபோக நெற்செய்கையை விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர்.

குடமுருட்டிக்குளத்தின் கீழான சிறுபோக நெற்செய் கைக்கான கூட்டம் நிறைவு பெற்று தற்போது பயிர்ச் செய்கை முயற்சிகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, கூட்டத் தீர்மானத்தை மீறி, சில விவ சாயிகள் மேலதிக விதைப்புகளில் ஈடுபட்டுள்ளனர் என அதிகாரிகளிடம் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

குடமுருட்டிக்குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கை யின்போது கூடுதலான விதைப்புகளில் விவசாயிகள் ஈடுபடுவது தொடர்பாக சிறுபோக நெற்செய்கைக் கூட் டங்களில் கடந்த காலங்களிலும் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது. சிறுபோக நெற்செய்கைக் கூட்டத் தீர்மானத்தை உரியமுறையில் நடை முறைப்படுத்துவதற்கு அதிகாரி கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என சட்ட ரீதியான பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குடமுருட்டிக்குளம் நீண்டகாலமாகப் புனரமைக்கப் படாமல் உள்ளது. அந்தக் குளம் முழுமையாகப் புனரமைக் கப்படவேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத் துள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.03.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஈழநாடு






# மகளிர் பிறீமியர் லீக் பெங்களூர் சம்பியன்

புதுடில்லி, மார்ச் 19

நடப்பு மகளிர் பிறீமியர் லீக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் டில்லி கப்பிட்டல்ஸ் அணியை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றுள்ளது றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி. இந்தப் போட்டியில் 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் அந்த அணி வெற்றி பெற்றது.

புதுடில்லியில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற டில்லி கப்பிட்டல்ஸ அணி துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது. அந்த அணி முதலில் துடுப்பெடுத்தாடி 18.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 113 ஓட்டங்கள் எடுத்தது.

அந்த அணி முதல் விக்கெட்டை 64 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது இழந்தது. ஷெபாலி வர்மா மற்றும் மெக் லெனிங் இணைந்து முதல் விக்கெட்டுக்கு சிறப்பான தொடக்கம் கொடுத்திருந்தனர். ஷெபாலி 27 பந்துகளில் 44 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார்.

அதே ஓவரில் ஜெமிமா றொட்ரிக்ஸ் மற்றும் அலைஸ் கேப்ஸி ஆகியோர் ஓட்டம் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழந்தனர். அவர்கள் மூவரின் விக்கெட்டையும் சோபி மோலினக்ஸ் கைப்பற்றி இருந்தார். பெங்களூர் அணிக்கு ஆட்டத்தில் திருப்புமுனை கொடுத்த ஓவர் அது. அதன் பிறகு தொடர்ச்சியாக டில்லி அணி விக்கெட்டை இழந்தது. பெங்களூார் அணியின் ஷ்ரேயங்கா மற்றும் ஆஷா ஷோபனா ஆகியோரும் சிறப்பாக பந்து வீசி விக்கெட் வீழ்த்தி இருந்தனர்.

114 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை பெங்களூர் அணி விரட்டியது. அணித்தலைவர் ஸ்மிருதி மந்தனா மற்றும் சோபி டிவைன் இணைந்து இன்னிங்ஸை தொடங்கினர். அதிரடியாக ஆடி விக்கெட்டை இழக்க வேண்டாம் என நிதானமாக இன்னிங்ஸை அணுகினர். சோஃபி டிவைன் 32 ஓட்டங்களிலும், ஸ்மிருதி 31 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். இருந்தும் மறுமுனையில் ஆடிய எல்லிஸ் பெர்ரி பொறுப்புடன் ஆடினார்.

ஆட்டம் கடைசி ஓவர் வரை சென்றது. அந்த ஓவரில் பெங்களூார் வெற்றிக்கு 5 ஓட்டங்கள் தேவைப்பட்டது. முதல் இரண்டு பந்துகளில் ரிச்சா கோஷ் மற்றும் பெர்ரி என இருவரும் ஒற்றை ஓட்டம் எடுக்க மூன்றாவது பந்தை பௌண்ட்ரிக்கு விரட்டி வெற்றியை உறுதி செய்தார் ரிச்சா. இந்தப் போட்டியில் 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் பெங்களூார் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்று வரலாறு படைத்துள்ளது.

எல்லிஸ் பெர்ரி, 37 பந்துகளில் 35 ஓட்டங்கள் எடுத்தார். ரிச்சா, 14 பந்துகளில் 17 ஓட்டங்கள் எடுத்தார். (ஐ)



## இந்தியன்வெல்ஸ் ரென்னிஸ் ஸ்வியாரெக் சம்பியனானார்

கலிபோர்னியா, மார்ச் 19

இந்தியன் வெல்ஸ் ஓப்பன் ரென்னிஸின் சம்பியன் பட்டத்தை போலந்தின் இகா ஸ்வியாரெக் கைப்பற்றினார்.

அமெரிக்காவில் நடைபெற்று வந்த இந்தியன்வெல்ஸ் ரென்னிஸ் தொடரின் கடைசி ஆட்டங்கள் நேற்று நடைபெற்றன.

இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதி ஆட்டத்தில் போலந்தின் இகா ஸ்வியாரெக், கிரீஸ் வீராங்கனை மரிய சக்காரியுடன் மோதினார்.

இந்த ஆட்டத்தில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய இகா ஸ்வியாரெக் 6-4, 6-0 என்ற செற் கணக்கில் மரியா சக்காரியை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார்.



## இந்தியன்வெல்ஸ் ரென்னிஸ் சம்பியன் வென்றார் அல்காரஸ்!

கலிபோர்னியா, மார்ச் 19

இந்தியன்வெல்ஸ் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் சம்பியன் பட்டத்தை அல்காரஸ் கைப்பற்றினார்.

அமெரிக்காவின் - இந்தியன்வெல்ஸ் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் இறுதியாட்டம் நேற்று நடந்தது.

இதில் ரஷ்யாவின் மெத்வதேவை எதிர்கொண்டார் ஸ்பெய்னின் அல்காரஸ். முதல் செற் ஆட்டம் பரபரப்பாக அமைந்தது.

இதில் 7- 6 (7-5) என்ற கணக்கில் அல்காரஸ் வெற்றி பெற்றார். இரண்டாவது செற்றில் அனுபவ வீரரான மெத்வதேவால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. இந்த செற்றை அல்காரஸ் 6 -1 என்ற கணக்கில் வெற்றி பெற்றார்.

## டெஸ்ட் கிரிக்கெட் மத்தியூ வேட் ஓய்வு

சிட்னி, மார்ச் 19

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி வீரர் மத்தியூ வேட் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சிட்னியில் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தபோது, “இளம் வீரர்களுக்கு வழிவிட்டு டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுகிறேன். இருப்பினும் தொடர்ந்து ஒருநாள் போட்டி, இருபது - 20 போட்டிகளில் விளையாடுவேன்”, என்றார்.

விக்கெட் காப்பாளரான மத்தியூ வேட் அவுஸ்திரேலிய அணிக்காக 36 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 1,613 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதில், 4 சதங்கள் அடங்கும். மேலும் விக்கெட் காப்பின்போது 74 பிடிகளையும், 11 ஸ்றொம்ப்களையும் செய்துள்ளார். (ஐ)






## மதுஷங்க காயம்

மும்பை, மார்ச் 19

இலங்கை கிரிக்கெட் அணி வீரரும் மும்பை இந்தியன்ஸ் ஐ. பி. எல். அணி வீரருமான டில்ஷான் மதுஷங்க காயமடைந்துள்ளார். இதனால் அவர் ஐ. பி. எல். போட்டியின் தொடக்க ஆட்டங்களில் விளையாடுவது சந்தேகம் எனத் தெரியவந்துள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணி தற்போது பங்களாதேஷில் விளையாடி வருகிறது. முதலில் நடைபெற்ற இருபது - 20 தொடரை 2-1 என்ற கணக்கில் இலங்கை அணி கைப்பற்றியது. இதையடுத்து இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியின்போது இடது தொடையில் மதுஷங்க காயமடைந்தார். இதனால், ஆட்டத்தின் பாதியிலேயே மைதானத்திலிருந்து அவர் வெளியேறினார். இதைத் தொடர்ந்து பங்களாதேஷுக்கு எதிரான எஞ்சிய தொடர்களில் இருந்து அவர் விலகியுள்ளார்.

இதனால் நடப்பு ஐ. பி. எல். தொடரின் முதல் பாதி ஆட்டங்களில் மதுஷங்க விளையாட முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. ஐ. பி. எல். தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணியில் முக்கிய பந்துவீச்சாளராக அவர் இடம் பிடித்துள்ளார். அவர் தொடக்க ஆட்டங்களில் விளையாட முடியாத சூழல் மும்பை அணிக்கு பின்னடைவாக அமையும் என்று கருதப்படுகிறது. (ஐ)

# உலகம் உற்றுநோக்கும் ரஷ்ய தேர்தல்: ஐந்தாவது முறை புடினின் வெற்றி !

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**




புட்டினின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் தேர்தல் என்பதால் இந்த தேர்தல் உலகம் முழுவதும் கவனம் பெற்றுள்ளது. சோவியத் ஒன்றிய சிதைவின் பின்னரான ரஷ்யாவின் முதல் அதிபர் பொறிஸ் யெல்ட்சின் 1999இல் பதவி விலகியதை அடுத்து விளாடிமிர் புட்டின் கடந்த இருபது ஆண்டுகளாக தலைமைப் பதவி வகித்து வருகிறார்.

ரஷ்யாவில் கடந்த மூன்று நாட்களாக அதிபர் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெற்றது. இந்த தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைத்திட புட்டினே முன்னைலையில் உள்ளார். ரஷ்யாவில் அதிபர் தேர்தலில் சுமார் 11.4 கோடி பேர் வாக்களித்தனர்.

2000 முதல் 2008 வரையிலும், பின்னர் 2012ல் இருந்து தற்போது வரையிலும் அவர் அதிபராக தொடர்கிறார். புட்டினின் 6 ஆண்டு பதவிக்காலம் முடிவடைய இருப்பதையொட்டி, புதிய அதிபரை தேர்வு செய்வதற்கான தேர்தல் மார்ச் 15 முதல் 17ம் வரை நடந்தது.


இத்தேர்தலிலும் புட்டின் வெற்றி பெற்று 2030 வரையிலும் அதிபராக நீடிப்பதற்கான வாய்ப்புகளே அதிகம் உள்ளன. அவரை எதிர்த்து மார்க்சிஸ்ட் உள்ளிட்ட மூன்று கட்சிகளின் வேட்பாளர்கள் களமிறங்கினர்.

கடந்த 2018 தேர்தலில் புட்டின் 76.7 சதவீத வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். இம்முறை அவர் 80 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகள் பெற்று வெல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

### வாக்குரிமையை உணர வேண்டுகோள்:

உக்ரைன் போரால் ராணுவச் செலவினம் அதிகரிப்பு, பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் ரஷ்யாவில் தேர்தல் நடைபெற்றது. உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்ததால், அதன் மீது அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகள் பல்வேறு தடைகளை விதித்தன.

கடந்த இரு ஆண்டாக உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ள நிலையில் இந்த தேர்தல் நடந்தது. ஆனால் தேர்தலில் போருக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்ட எந்த எதிர்க்கட்சியும் இல்லை, தலைவரும் இல்லை. மேலும் ரஷ்யர்களின் ஆதரவுடன் இப்போரை புட்டின் அரசு நடத்தி வருவதால், உக்ரைன் போர் இத்தேர்தலில் எந்த எதிர்மறை தாக்கத்தையும் ஏற்படுத்தாது.






> **உலக நாடுகள் கூர்ந்து கவனிக்கும் வேளையில், பல நெருக்கடிக்கு மத்தியில் ரஷ்ய அதிபர் தேர்தல் நடந்துள்ளது. ஐந்தாவது முறையாக அதிபராக புட்டின் பதவியேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.**







சர்வதேச ரீதியில் சக்தி வாய்ந்த தலைவர்களில் ஒருவராக வலம் வரும் புட்டின் ரஷ்யாவின் அதிபராக சுமார் இருபது ஆண்டு காலமாக பதவி வகித்து வருகிறார். தேர்தலுக்கு முன்பாக பொது மக்களிடம் பேசுகையில், வாக்குரிமையை உணர்ந்து வாக்காளர்கள் செயல்பட வேண்டும் என்று ரஷ்ய அதிபர் புட்டின் வேண்டுகோள் விடுத்தார்.

### கடும் கட்டுப்பாடுகளுடன் தேர்தல்:

கடுமையான கட்டுப்பாடுகளுடன் ரஷ்யாவில் அதிபர் தேர்தல் நடைபெற்றது. உக்ரைன் மீது போர் தொடங்கிய பிறகு புட்டினுக்கு உள்நாட்டில் எதிர்ப்புகள் பல கிளம்பின. அதேபோல், சமீபத்தில் ரஷ்ய எதிர்கட்சி தலைவர் அலெக்ஸி நவால்னி மர்மமான முறையில் உயிரிழந்ததும் புட்டினுக்கு கடும் நெருக்கடியை கொடுத்தது. இத்தகைய நெருக்கடிக்கு மத்தியில் ரஷ்யாவில் அதிபர் தேர்தல் நடந்தது. ஆயினும் அதிபர் தேர்தலில் புட்டின் சுயேட்சையாகவே போட்டியிட்டார்.

அவரை எதிர்த்து மார்க்சிஸ்ட் உள்ளிட்ட மூன்று கட்சிகளின் வேட்பாளர்கள் களத்தில் போட்டியிட்டனர். ரஷ்ய ஜனாதிபதி தேர்தலில் வாக்காளர்கள் ஆர்வத்துடன் வாக்களித்து உள்ளதாக கூறப்படுகின்றது. அத்துடன் கம்யூனிஸ்ட் கட்சியின் நிகோலாய் கரிடோனோவ், தேசியவாத லிபரல் டெமாக்ரடிக் கட்சியின் லியோனிட் ஸ்லட்ஸ்கி மற்றும் புதிய மக்கள் கட்சியின் விளாடிஸ்லாவ் டாவன்கோவ் ஆகியோரும் தேர்தலில் போட்டியிட்டனர்.

ஆனாலும் இந்த கட்சிகள் கிரெம்ளின் கொள்கைகளையே ஆதரிக்கின்றன. அதேசமயம் இத்தேர்தலில் நான்குமுனை போட்டி இருந்தாலும், மீண்டும் புட்டினே வெற்றி பெற்று ஐந்தாவது முறையாக அதிபராக பதவியேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை ரஷ்ய பகுதிகள் மற்றும் ரஷ்யாவுடன் இணைக்கப்பட்ட முன்னைய உக்ரைன் பகுதிகளில் உள்ள மக்கள் முதல் முறையாக வாக்களித்தனர். இதேபோல் வெளிநாடுகளில் வாழும் ரஷ்யர்கள் அந்தந்த நாடுகளில் உள்ள தூதரகங்கள், துணை தூதரகங்களுக்கு சென்று வாக்களித்தனர்.


### எண்பது சதவீத வாக்குகள் பெறுவார்?

உக்ரைன் போரால் ரஷ்யாவில் கடும் பொருளாதார நெருக்கடி உள்ளிட்டவற்றை ஏற்படுத்தினாலும் தற்போது தேர்தலில் போட்டியிட்ட மூன்று பேருமே உக்ரைன் மீதான போருக்கு ஆதரவான நிலைப்பாடு கொண்டவர்கள். இதனால் இத்தேர்தலில் உக்ரைன் போர் பெரிதாக எதிரொலிக்காது என்று கூறப்படுகிறது. இது புட்டினுக்கு ஒரு சாதகமாக பார்க்கப்படுகிறது.

அதேவேளை அதிபர் புட்டினை கடுமையாக விமர்சித்து வந்த எதிர்க்கட்சி தலைவர் அலெக்சி நவால்னியும் சிறையில் உயிரிழந்து விட்டதால் கடும் போட்டி இல்லை. இதனால் எண்பது சதவீத வாக்குகளுக்கு மேல் புட்டின் பெறுவார் என்று கூறப்படுகிறது. இதனால் ஐந்தாவது முறையாக புட்டின் வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ரஷ்யாவில் நடைபெறும் இந்த தேர்தலை உலக நாடுகள் உன்னிப்பாக கவனித்து வருகின்றன. தேர்தலின் இறுதிக்கட்ட வாக்குப்பதிவு முடிவடைந்ததும் வெற்றி பெறும் வேட்பாளர், மே மாதம் அதிபராக பதவியேற்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.






எந்தவித பாரிய அசம்பாவித சம்பவங்களும் இல்லாமல் வாக்கு பதிவு நடந்துள்ளதாகவும், மீண்டும் புட்டின் வெற்றி பெற்று ரஷ்யாவின் நீண்ட கால தலைவராக மூன்று தசாப்தங்களுக்கு நீடிப்பார் என்றும் பரவலாக பார்க்கப்படுகிறது. அத்துடன் ரஷ்ய அரசியல் சாசன திருத்தங்களுக்கு பின்னர், புட்டின் 2036-ம் ஆண்டு வரை அரசியலில் அதிகாரத்தில் நீடிக்க வழிவகை செய்யப்பட்டு உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. ●

# ஓர் அஞ்சலி நிகழ்வும் எதிரிகளை தேடும் அரசியலும்



யதீந்திரா

ஒரு பேரவலத்தின் போதுதான், ஒரு சமூகம் தன்னை உணர்ந்து கொள்ள முடியும். வரலாற்று நெருக்கடிகளை எதிர்கொள்ளும் திறனற்ற சமூகங்கள், அந்த நெருக்கடிக்குள் தங்களை தொலைத்துவிடுகின்றன - மாறாக, நெருக்கடிகளை எதிர்கொள்ளும் ஆற்றலுள்ள சமூகங்களோ முன்னோக்கி பயணிக்கின்றன. அந்த வகையில், முளிவாய்க்கால் பேரவலம் வெறுமனே விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முடிவு மட்டுமல்ல - மாறாக, நம்மை ஆட்கொண்டிருந்த கற்பனாவாதங்கள், திமிர்த்தனங்கள், அதிமேதாவித் தனங்கள், அனைத்தினதும் முடிவாகும். ஆனாலும் இப்போதும் இதனை புரிந்துகொள்ளுமளவிற்கு, தமிழ் சமூகம் முன்னேறாமல் இருப்பதுதான் வேதனையானது. வெறும் உணர்சிகரமான தேசியக் கோசங்களாலும், பகட்டு வார்த்தைகளாலும் தமிழினத்தால் ஒரு அடி கூட முன்னோக்கி நகர முடியவில்லை. அனைத்திலும் தோல்வி மட்டுமே மிஞ்சுகின்றது. மிச்சமென்ன சொல்லுங்கப்பா என்று, காலம்சென்ற கவிஞர் கி.பி.அரவிந்தனின் ஒரு கவி வரியுண்டு. ஆனால் இந்த நிலையிலும் களத்திலும் சரி, புலத்திலும் சரி, கோசங்கள் மட்டும் குறையவில்லை.

அண்மையில் இந்தக் கோச அரசியல் கூட்டம், மரணமான சாந்தனை, ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டது. இதற்கு விளக்கமளிப்பதற்கு, கருத்துருவாக்கிகள் என்போரும் இருக்கின்றனர்.

யாரிந்த சாந்தன்? இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் படுகொலையில் சம்பந்தப்பட்டு, இந்திய நீதித்துறையால் தண்டனை விதிக்கப்பட்டவர். தண்டையின் பின்னர் விடுவிக்கப்பட்ட அவர், உரியமுறையில் அவரது குடும்பத்தினருடன் இணைவதற்கான காரியங்கள் முறையாக நடைபெறவில்லை. தமிழ் நாட்டில் சாந்தனுக்கு பல ஈழ ஆதரவு அரசியல்வாதிகள் அஞ்சலி செலுத்தியிருந்தனர். அவ்வாறானவர்கள் சாந்தன் உயிரோடு இருக்கின்ற போது, உரிய நடவடிக்கைகளை எடுத்திருந்தால், அதே போன்று, புலம்பெயர் சூழலிலிருப்போர் உரிய காலத்தில் விரைந்து செயற்பட்டிருந்தால், சாந்தன் நலமாக நாடு திரும்பியிருக்காலம், ஆனால் அவ்வாறு எதனையும் செய்யாதவர்கள், பலரும் தங்களின் அரசியல் நிகழ்சிநிரலுக்காக, சாந்தனின் மரணத்தை பயன்படுத்திக் கொண்டனர்.

ஒரு வேளை விடுதலைப் புலிகள் இயக்கம் இருந்திருந்தால் - அதாவது, பிரபாகரன் இருந்திருந்தால், புலிகள், ஒரு போதும் சாந்தனின் இறுதி நிகழ்வை பொறுப்பெடுத்திருக்க மாட்டார்கள். ஏனெனில் தாங்கள் செய்த தவறிலிருந்து வெளியேறுவதற்கான கதவுகளை திறக்கும் வழிகளையே அவர்கள் இறுதிவரையில் தேடிக் கொண்டிருந்தனர். இந்தியாவினால் மட்டுமே தங்களது குரல்வளையை இறுக்கியிருக்கும், கயிறை அறுத்தெறிய முடியுமென்பதில் புலிகளிடம் தெளிவிருந்தது. அதற்காக முயற்சித்தனர். அந்த அடிப்படையிலேயே அன்ரன் பாலசிங்கம் கடந்த கால தவறுகளுக்காக மன்னிப்பும் கோரினார். ஆனால் பாலசிங்கம் அவ்வாறான நகர்வை முன்னெடுத்த போது, காலம் அதிமாகவே கடந்திருந்தது.

சாந்தனின் அஞ்சலி நிகழ்வு மிகவும் சுதந்திரமாக அனுமதிக்கப்பட்டிருந்தது. வழமையான கெடுபிடிகள் எவையும் இல்லை. நிகழ்வை ஏற்பாடு செய்தவர்கள், சாந்தனை ஒரு விடுதலைப் புலிகளின் உறுப்பினர் என்பதை ஏற்றுக் கொண்டனர். விடுதலைப் புலிகளின் கொடி போர்த்தப்படவில்லையே தவிர, ஏனைய அனைத்தும் நிகழ்ந்தது. விடுதலைப் புலிகளின் மாவீரர் தின நிகழ்வுகளின் போது காண்பிக்கப்படும் எந்தவொரு கெடுபிடியும் இல்லை.

> **இத்தனை அனுபவங்களுக்கு பின்னரும் கூட, தமிழ் சமூகத்தினால் புத்திசாதுர்யமாக சிந்திக்க முடியவில்லையாயின், செல்வநாயகம் கூறியது போன்று, தமிழ் மக்களை அந்தக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் ஆனால் அந்தக் கடவுளும் கூட, இவ்வாறானதொரு மொக்கு மக்கள் கூட்டத்தை காப்பாற்றுவாரா என்பது கேள்விக்குறிதான்.**

மக்கள் திரட்டப்பட வேண்டும், எந்தளவிற்கு மக்கள் திரட்டப்படுகின்றார்களோ - அந்தளவிற்கு அது தமிழ் தேசியத்திற்கு பலம் சேர்க்கும் என்று கதைகள் புனைவோர் உண்டு. அதனை புரிந்துகொள்ளும் திறனின்றி, தலைக்குள் போட்டுக்கொள்பவர்கள் உண்டு. ஆனால் புத்தியுள்ள ஒவ்வொரு தமிழரும், தனக்குள் கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி, அவ்வாறு திரட்டப்படும் மக்கள், எந்த இலக்கின் அடிப்படையில் திரட்டப்படுகின்றார்கள்? இந்தக் கேள்வியின்றி, தலையாட்டினால், அவ்வாறு திரட்டப்படும் மக்கள், தங்கள் அரசியல் எதிர்காலத்தின் மீது, மண்ணை வாரிப் போட்டுக்கொள்வர்.

ஏனெனில், அவ்வாறான மக்கள் திரட்சி, இறுதியில், அவர்களது பரந்துபட்ட நலன்களுக்கு எதிராகவே பயன்படுத்தப்படும். சாந்தனின் இறுதி நிகழ்வு இதற்கு ஒரு சிறந்த உதாரணம். சாந்தனின் இறுதி நிகழ்வு நன்கு திட்டமிடப்பட்ட வகையில், இந்திய எதிர்ப்பு என்னும் ஒற்றை இலக்கிற்காகவே பயன்படுத்தப்பட்டது. ராஜீவ்காந்தி கொலையுடன் தொடர்புடைய ஒருவரை போற்றுவதும், அவருக்கு வணக்கம் செலுத்துவதும், சொல்லும் செய்தி என்ன? அந்தக் கொலை சரியென்று மக்கள் கருதுவதான தோற்றம்தானே காட்சிப்படுத்தப்படுகின்றது! இது எந்த வகையில் தமிழ் மக்களுக்கு நன்மை செய்யும்?

2009இற்கு பின்னரான தமிழர் அரசியல் என்பது, அடிப்படையில் சர்வதேச அரங்குகளில் நீதியை கோரும் அரசியலாகும். மனித உரிமைக் கோரிக்கையே தமிழர் அரசியலின் அடிப்படையாக காண்பிக்கப்படுகின்றது. ஒரு நாட்டின் பிரதமரின் கொலையில் சம்மந்தப்பட்டவரை, போற்றுவதன் ஊடாக, தமிழ் மக்கள் சர்வதேச சமுகத்திற்கு முன்னால் தங்களை எவ்வாறு வெளிப்படுத்துகின்றனர்? இவ்வாறான செயற்பாடுகள், தமிழ் மக்கள் ஒரு பாதிக்கப்பட்ட இனம் என்னும் உணர்வை வழங்குமா?

இவ்வாறான நினைவு கூர்தல் நிகழ்வுகளுக்கிடையில் ஒரு ஒற்றுமையிருப்பதை காணலாம். ஒப்பீட்டடிப்படையில் திலீபனின் நினைவு தின நிகழ்வுகள், பெரியளவில் கெடுபிடிகளின்றி அனுமதிக்கப்படுகின்றன. ஆனால் ஏனைய மாவீரர் தின நிகழ்வுகள் அவ்வாறான சுதந்திரத்தோடு அனுமதிக்கப்படவில்லை. திலீபனின் நினைவு தினம், அதே போன்று, பூபதியின் நினைவு தினம் ஆகியவை, இந்திய - இலங்கை ஒப்பந்த காலத்திற்குரியவை.

இந்த நிகழ்வுகளை முன்னெடுப்பவர்கள், தங்களின் இந்திய எதிர்ப்பு பிரச்சாரங்களுக்கே இதனை பயன்படுத்திக் கொள்கின்றனர். இதன் மூலம், விடுதலைப் புலிகளின் காலத்து, இந்திய எதிர்ப்பை புதிய தலைமுறையினருக்குள் புகுத்த முற்படுகின்றனர். இந்தியாவின் அணுகுமுறையால்தான் குறித்த மரணங்கள் நிகழ்ந்ததாகவே இளைய தலைமுறையினருக்கு கற்பிக்கப்படுகின்றது. அதே போன்றுதான் சாந்தனின் இறுதி நிகழ்வும் திட்டமிடப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் சாந்தனின் நினைவு தினம் அனுஸ்டிக்கப்பட்டாலும் கூட, ஆச்சரியப்படுவதற்கில்லை. இவ்வாறான விடயங்களால், யாருக்கு நன்மை - நிச்சயமாக தமிழ் மக்களுக்கு நன்மையில்லை.

சாந்தனின் நிகழ்வின் போதும் இந்தியாவிற்கு எதிரான கருத்துக்களே முன்வைக்கப்பட்டன. ஆனால் இந்த நிகழ்வுகள் மிகவும் சுதந்திரமாக அனுமதிக்கப்பட்ட சில தினங்களிலேயே, வெடுக்குநாறி சிவன் ஆலத்தின் சிவராத்திரி நிகழ்வுகள் தடுக்கப்பட்டிருக்கின்றன. இது எதனை உணர்த்துகின்றது? இந்திய எதிர்ப்பு அரசியலுக்கான வாய்ப்புக்கள் ஊக்குவிக்கப்படுகின்றனவா? இதற்கு பின்னாலுள்ள தந்திரத்தை தமிழ் சமூகம் புரிந்துகொள்ளவில்லையா? இந்த விடயங்களை கண்டிக்க வேண்டிய தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் என்போர், சிவில் சமூகக் குழுக்கள் என்போர், புத்திஜீவிகள் என்போர் ஏன் மௌனமாக இருக்கின்றனர்? புலம்பெயர் சமூகத்தில் தங்களை முன்னேறியவர்களாக காண்பித்துக் கொள்ளுபவர்கள் ஏன் அமைதியாக இருக்கின்றனர்?

தமிழ் மக்களுக்கான போராட்டத்தின் பெயரால் ஏராளமான இழப்புக்கள் நிகழ்ந்திருக்கின்றன. அனைத்து இயக்கங்களையும் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் தங்களின் உயிர்களை தியாகம் செய்திருக்கின்றனர். பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் உயிரிழந்திருக்கின்றனர். ஏராளமான ஆளுமையுள்ள தலைவர்களின் உயிர்கள் பலியிடப்பட்டிருக்கின்றன. ஆனால் இவற்றால் தமிழ் மக்கள் கண்டது என்ன? இப்போது தமிழ் மக்கள் எந்த இடத்தை வந்தடைந்திருக்கின்றனர்?

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் போதிய தியாயங்களை செய்திருக்கின்றனர். அவர்களது தியாகங்களில் போலித்தனம் இல்லை. ஏனெனில் ஒரு மனிதன் தன்னுயிரை கொடுக்கும் விடயத்தில் போலித்தனமாக இருக்க முடியாது. ஆனால் இறுதியில் என்ன நடந்தது? முள்ளிவாய்க்காலில் அனைவரது தியாகமும் - ஐயோ காப்பாற்றுங்கள் என்னும் அபயக் குரலில்தானே தஞ்சமடைந்தது. அந்த சந்தர்ப்பத்தில் எந்தவொரு நாடும், தமிழ் மக்களை காப்பாற்ற வரவில்லையே!

ஏன்? ஏனெனில் தமிழ் மக்களுக்கு பலமான நட்பு நாடு ஒன்றில்லை. இந்தப் பிராந்தியத்தில் அவ்வாறானதொரு நட்பு நாடு இருக்க முடியுமென்றால், அது இந்தியா மட்டும்தான். என்னுடைய எழுத்துக்களில் தொடர்ந்தும் ஒரு விடயத்தை வலியுறுத்தி வந்திருக்கின்றேன். அதாவது, இந்தியாவின் நட்பு என்பது தமிழ் அரசியலுக்கான அஸ்திபாரமாகும். இன்னொருவகையில் அது ஒரு பிராந்திய யதார்த்தமும் கூட. இந்த யதார்த்தத்தை புரிந்து கொள்ளத் தவறியதால்தான், விடுதலைப் புலிகளை காப்பாற்ற எவரும் இருக்கவில்லை.

கடந்தகாலம் நமக்கு போதிய படிப்பினைகளை தந்திருக்கின்ற போதும் கூட, ஏன் நாம் தொடர்ந்தும், கற்றுக்கொள்ள மாட்டோமென்று, அடம்பிடிக்கின்றோம். இன்று தமிழர் அரசியலின் பெயரால் இடம்பெறும் விடயங்களை உற்றுநோக்கினால் தமிழ் மக்கள், ஒரு மொக்கு சமூகமா - என்னும் கேள்வியல்லவா நம்மை தலைகுனிய வைக்கின்றது.

இத்தனை அனுபவங்களுக்கு பின்னரும் கூட, தமிழ் சமூகத்தினால் புத்திசாதுர்யமாக சிந்திக்க முடியவில்லையாயின், செல்வநாயகம் கூறியது போன்று, தமிழ் மக்களை அந்தக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் ஆனால் அந்தக் கடவுளும் கூட, இவ்வாறானதொரு மொக்கு மக்கள் கூட்டத்தை காப்பாற்றுவாரா என்பது கேள்விக்குறிதான். ●

# பல அரச நிறுவனங்களில் தொலைபேசி தொலைநகல், இணையம் செயலிழப்பு!

## இராஜாங்க அமைச்சர் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 19

பல அரச நிறுவனங்களின் தொலைபேசி, தொலைநகல் இயந்திரங்கள் மற்றும் இணையத்தளங்கள் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளதால் பொதுமக்கள் அந்த நிறுவனங்களுடன் தொடர்பு கொள்வதற்கான வாய்ப்பை இழந்துள்ளதாக உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த குற்றம் சுமத்தியுள்ளார்.

அரச சேவையின் வகிபாகத்தை புரிந்துகொள்ளாத மற்றும் அரச சேவையில் வேண்டுமென்றே தமது பொறுப்புக்களை புறக்கணிக்கும் அதிகாரிகள் இதில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன் காரணமாக பொது மக்களிடமிருந்து பெறப்படும் ஆலோசனைகள், குற்றச்சாட்டுகள், குறைகள், தனிப்பட்ட அல்லது பொதுக் கேள்விகளுக்கு உடனடியாக பதில் அனுப்புமாறு உள்நாட்டு அமைச்சினால் அனைத்து அதிகாரிகளுக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என அவர் கூறினார்.

(அ)

# பொலித்தீன் பைகளை பயன்படுத்தாத வாடிக்கையாளர்களுக்கு கொடுப்பனவு



கொழும்பு, மார்ச் 19

பொலித்தீன் பைகளை பயன்படுத்தாத வாடிக்கையாளர்களுக்கு கொடுப்பனவு வழங்க சுற்றுச்சூழல், இயற்கை வளங்கள் மற்றும் நிலையான வளர்ச்சிக்கான துறைசார் மேற்பார்வைக்கான பாராளுமன்றக் குழு இணக்கம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, வழங்கப்படும் கொடுப்பனவுத் தொகை தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுப்பதற்காக சுப்பர் மார்க்கெட் உரிமையாளர்கள் குழு எதிர்வரும் 21ஆம் திகதி அழைக்கப்பட்டதாக அதன் தலைவரும் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அஜித் மன்னப்பெரும தெரிவித்தார்.

பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனையை குறைத்து சுற்றுச்சூழலை பாதுகாப்பதே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுப்பர் மார்க்கெட்களால் வழங்கப்படும் பொலித்தீன் பைகள் தொடர்பில் முடிவெடுப்பதற்காக சுப்பர் மார்க்கெட் உரிமையாளர்கள், அண்மையில் சுற்றுச்சூழல் இயற்கை வளங்கள் மற்றும் நிலையான அபிவிருத்திக்கான பாராளுமன்றக் குழுவுக்கு அழைக்கப்பட்டனர். (அ)

# விவசாயிகள் ஜனாதிபதியை சந்தித்தனர்



அரை ஏக்கர் மிளகாய் பயிரிட்டு ஒன்பது மாதங்களில் 12 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டிய அநுராதபுரத்தைச் சேர்ந்த இளம் விவசாயி பந்துல முனசிங்க மற்றும் ஒரு ஏக்கர் தர்பூசணி பயிரிட்டதன் மூலம் இரண்டு மாதங்களில் 4 மில்லியன் ரூபா வருமானம் பெற்ற கல்குளம பிரதேசத்தைச் சேர்ந்த இளம் விவசாயி புத்திக சுதர்ஷன. ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைச் சந்தித்தனர்.

இந்த இளம் விவசாயிகள் தமது அறுவடையின் ஒரு பகுதியுடன் ஜனாதிபதியைச் சந்தித்ததுடன், வளமான விளைச்சலைப் பெறுவதற்கு வழிகாட்டி அரசாங்கத்தின் விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியமைக்காக ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்தனர்.

விவசாய அமைச்சின் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தினூடாக அறிமுகப்படுத்தப்பட்ட அதிக அடர்வு பயிர்ச்செய்கை முறையைப் பயன்படுத்தி பந்துல முனசிங்க அரை ஏக்கரில் மிளகாய் பயிரிட்டுள்ளார்.

பாரம்பரிய முறையில் அரை ஏக்கரில் பயிரிடக்கூடிய மிளகாய் செடிகள் சுமார் 6000 செடிகள், ஆனால் இந்த அதிக அடர்வு பயிர்ச்செய்கை முறை யில் பயிரிடக்கூடிய மிளகாய் செடிகளின் எண்ணிக்கை 13,000 ஆக அதிகரித்துள்ளது. இந்த புதிய முறையில் பல மடங்கு விளைச்சலை அதிகரிக்க முடியும் என்றார்.

அநுராதபுரம் திரப்பனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கல்குளம் பிரதேசத்தில் வசிக்கும் புத்திக சுதர்சன நவீன தொழில்நுட்பத்தில் ஒரு ஏக்கரில் மேற்கொள்ளப்பட்ட தர்பூசணி சாகுபடியில் அதிக விளைச்சல் பெற முடிந்ததாகவும், ஒரு கிலோ தர்பூசணியை சுமார் 180ரூபாய்க்கு விற்பனை செய்ததன் மூலம் இந்த அதிக வருமானத்தைப் பெற முடிந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் விவசாயத்தில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தில் இவ்வாறான இளம் விவசாயிகள் முன்னுதாரணமாக திகழ்வதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, விவசாயிகளின் செயலைப் பாராட்டி அவர்களுக்கு நினைவுப்பரிசுகளை வழங்கி வைத்தார்.

